பொது நூலகம்
கோண்டாவில்

வாராந்த சஞ்சிகை

ஜூலை 08 - 14, 2015

# சுடர் ஒளி

பக்கம் 24

விலை 30/-



# சவாலும் எதிர்ச்சவாலும்







# ரஷ்யாவின் நவீன ஆகாயக் கப்பல்

உலக நாடுகள் மற்ற நாடுகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஏவுகணைகளை, போர் விமானங்களைத் தயாரித்து வரும் வேளையில், ரஷ்யா, சீனா உள்ளிட்ட சில நாடுகள் மற்ற நாடுகளின் மீது படையெடுக்க ஏவுகணைகள், போர் விமானங்கள் மற்றும் போர்க் கப்பல்களைத் தயாரித்து வருகின்றன.

அந்தவகையில் ரஷ்யா, சுமார் 200 இராணுவ வீரர்களை அல்லது 60 தொன் பொருட்களை ஏற்றிச் செல்ல வசதியான இராணுவ ஆகாய கப்பலை ரகசியமாகத் தயாரித்து வருகிறது.

'அக்குவார் ரோஸ்ஏரோ சிஸ்டம்' என்ற நிறுவனம் இந்த ஆகாயக் கப்பலை உருவாக்கி வருகிறது. வரும் 2018ஆம் ஆண்டு இது முழுமையாகத் தயாராகும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தற்போது இந்த ஆகாய கப்பல் தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளது. இந்த ஆகாய கப்பலின் முக்கிய அம்சம் என்னவென்றால் , இதற்கு விமான ஓடு பாதை (ரன் வே) தேவையில்லை.

நின்ற நிலையில் இருந்து இந்த இராணுவ ஆகாய கப்பல் அப்படியே செங்குத்தாக எழுந்து பறக்க வல்லது ஆகும். மொத்தம் 2 மாடல்களில் இது தயாராகிறது.

ஒன்று மணிக்கு 86 மைல் வேகத்தில் செல்லக் கூடியது. இது பெரியது. சிறிய ரக ஆகாயக் கப்பல் மணிக்கு 105 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக் கூடியதாகும்.

மைனஸ் 40 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையிலும் இது செல்லக் கூடியதாகும். காற்றை விட மெல்லியது என்று ரஷ்யர்களால் வர்ணிக்கப்படும் இந்த ஆகாயக் கப்பலானது. விமானங்கள், ஹோவர்கிராப்ட் ஆகியவற்றின் கூட்டுக் கலவையாகும்.





# ஜப்பானில் முதன் முறையாக ரோபோக்களுக்கு திருமணம்



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உலகிலேயே முதன் முறையாக ரோபோக்களுக்கு திருமணம் நடைபெற்றது.

'மய்வா டெங்கி' என்ற நிறுவனம் தயாரித்துள்ள இந்த ரோபோக்களில், ஆண் ரோபோவுக்குப் 'புரோயிஸ்' என்றும், பெண் ரோபோவுக்கு 'யுகிரின்' என்று பெயர்.

ஆண் ரோபோ அளவில் பெரியதாக எந்திர மனித உருவிலும், பெண் ரோபோ ஜப்பான் பொம்மை வடிவத்தில் வடிவமைக் கப்பட்டிருந்தது. பெண் ரோபோவுக்கு, உலகில் உள்ள மணப்பெண் போலவே சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து, இரு ரோபோவுக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்தும் இரு ரோபோக்களும் ஒருவரை ஒருவர் முத்தமிட்டு கொண்டது.

இதனை ஜப்பான் முறைப்படி கேக் வெட்டி, ஆடல், பாடல் போன்ற இசை நிகழ்ச்சிகள் நடத்தி கொண்டாடப்பட்டது.

கோண்டாவில்

ஆசாத்



# சவாலும் எதிர்ச்சவாலும்

கடந்த புதன்கிழமையன்று வீரக்கெட்டிய மெத்தனமுல்லவில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இல்லத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய அவர், எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளதாகப் பகிரங்க அறிவித்தலை விடுத்துள்ளார். கொழும்பிலிருந்து வாகனப் பேரணி மூலம் தங்காலை சென்ற முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் முன்னிலையிலேயே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது. அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனரத்தின மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராகவோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வேட்பாளராகவோ, போட்டியிடக் கட்சித்தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதிக்கப்போவதில்லை எனத் தெரிவித்த நிலையில், மஹிந்த தான் எந்தக் கட்சியில் போட்டியிடவுள்ளார் என்பதைத் தெரிவிக்கவில்லை. அதே வேளையில் பிரதமர் வேட்பாளராகத் தான் எவரையும் அடையாளப்படுத்தப் போவதில்லை எனவும், அதைத் தேர்தலின் பின்பு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களே முடிவு செய்வார் எனத் தெரிவித்துவிட்டார். எனினும் மஹிந்த தனக்கு வாக்களித்த 58 இலட்சம் வாக்காளரின் கோரிக்கைக்கு அமையவே தான் போட்டியிடுவதாகவும் ஒரு புதிய அரசாங்கத்தை அமைக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகப் போடப்பட்ட வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே களத்தில் இறங்கியுள்ளார். இதை மேலும் விளக்கமாகச் சொன்னால் அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அவருக்கு வாக்களித்த 63 இலட்சம் வாக்காளர்களுக்கும் எதிரான ஒரு அரசாங்கத்தை அமைக்கப்போவதாக அவர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் எந்தக் கட்சியில் போட்டியிடுவார் என்பது இன்னும் முடிவு செய்யப்படாத நிலையிலும்கூட ஜனாதிபதி மைத்திரிபாலவின் ஆட்சிக்குச் சவால் விடுக்கும் வகையில் அவர் தேர்தல் களத்தில் குதிக்கவுள்ளார்.

அவரின் இந்தச் சவாலுக்குப் போட்டியாக ஒரு எதிர்ச்சவால் எழுந்து கொண்டிருப்பதாகச் சில அறிகுறிகள் தென்படுகின்றன. அது மஹிந்தவை ஆட்டம் காணவைக்கும் வலிமை கொண்டதும், மக்கள் ஆதரவைப் பெற்றதும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதாவது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாக அவரின் ஊடகச் செயலர் தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த போர் வெற்றி மயக்க மூட்டிப் போட்டியிட்ட போதிலும், 58 வீத வாக்குகளையே பெறமுடிந்தது. ஆனால் 1995இல் சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலில் 63 வீத வாக்குகளைப் பெற்றுப் பெரும் வெற்றி பெற்றார். அதைவிட நேர்மையான, துணிச்சலான, கௌரவமான ஒரு அரசியல் தலைவர் என்ற பெருமை அவருக்கு உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் உள்ளன.

எனவே சந்திரிகா தேர்தலில் போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டால் மஹிந்த மைத்திரிக்கு விட்ட சவாலுக்கு சந்திரிகா பலத்த எதிர்ச்சவாலாக விளங்குவார் என்பதில் சந்தேகமில்லை.

எப்படியிருப்பினும் இந்தத் தேர்தல் இருதரப்பினருக்குமே ஒரு ஜீவமரணப் போராட்டமாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே போட்டி மிகப் பலமாக இருப்பதுடன், மஹிந்த தரப்பினர் பல்வேறு வழிகளையும் கையாண்டு வெற்றி கொள்ள முயற்சிகளை மேற்கொள்வார்கள். அதில் இனவாதப் பிரசாரமும் அது தொடர்பான நடவடிக்கைகளும் முக்கியமானவையாக முன்வைக்கப்படும். பாதாள உலகக் குழுக்களும் போதைவஸ்து கும்பல்களும் பல்வேறு விதங்களில் பயன்படுத்தப்படலாம். மஞ்சள் அங்கிக் காடைத்தனங்களும் வீதிக்கு வரக்கூடிய சாத்தியக்கூறுகளும் உண்டு.

ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் காணாமல் போனமை, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை , மிக் விமானக் கொள்வனவு, சட்டவிரோத ஆயுதக்களஞ்சியங்கள் பற்றிய முறைகேடுகள், வெள்ளைவான் கடத்தல்கள், பல படுகொலைகள், காணாமற்போதல்கள் போன்ற ஊழல், மோசடி ஆகிய அதிகாரத் துஷ்பிரயோகம் என்பன தொடர்பான குற்றச்சாட்டுகள் மஹிந்த தரப்புக்கு நெருக்கடிகளைக் கொடுக்கக் காத்திருக்கின்றன. அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மட்டத்தில் பதில் சொல்லவேண்டிய நிலை மஹிந்த தரப்புக்கு ஏற்படலாம்.

இவற்றிலிருந்து தப்ப அவர்களுக்கு உள்ள ஒரே வழி நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும்.

அதேவேளையில் மஹிந்த தரப்பு அதிகாரத்தைக் கைப்பற்றினால் மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா விஜகுமாரணதுங்க, ராஜீவ சேனரத்ன போன்றோர் பெரும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். தனக்கு எதிரானவர்களை மஹிந்த ராஜபக்ஷ எப்படி வேரோடு பிடுங்கி எறிவார் என்பதற்குக் கடந்த கால அனுபவங்கள் உயிருள்ள சாட்சியங்களாகும்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா பட்டங்கள் பறிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதையும், அரசியல் உரிமைகளை இழந்ததையும் மறந்துவிடமுடியாது. அதேபோன்று முன்னாள் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க பதவி பறிக்கப்பட்டதும், சொத்து விபரங்களை வெளியிடாத குற்றச்சாட்டில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதும் கடந்த கால அனுபவங்கள்.

எனவே தோல்வியடையும் தரப்புக்கு ஆபத்துக்கள் காத்திருப்பதால் வெற்றிக்கான முயற்சிகளும் மோதல்களும் பலமானதாகவும், பயங்கரமானதாகவும் இருக்குமென எதிர்பார்க்கலாம்.

சந்திரிகா தேர்தலில் போட்டியிடாது விட்டாலும் மைத்திரிபால தரப்பின் வெற்றிக்கு தீவிரமாகப் பாடுபடவேண்டிய தேவை உண்டு.

எப்படியிருப்பினும் சவாலும், எதிர்ச்சவாலும் தீவிரமாகவே இருக்கும் நிலையில், சூழ்நிலை ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வாய்ப்பாக அமைந்தாலும் ஆச்சரியப்பட்டு விட முடியாது.



# எரிந்து கொண்டிருக்கின்றது எண்ணெய்ப் பூமி 9

எஸ்.ஜே.பிரசாத்

**மொ**சூல் நகரத்தைக் கைப்பற்றிய போது அங்குள்ள மத்திய வங்கியைச் சூறையாடி, 429 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஈராக் தினார்களைக் கொள்ளை யடித்தனர் ஐ.எஸ் அமைப்பினர்.

இவ்வளவு அதிக பணம், உலகில் வேறு எந்த அமைப்பிடமும் இல்லை. ஆகவே, இவர்களிடம் ஆயுதங்களுக்குப் பஞ்சம் இல்லை. அவற்றால் சுட்டுத் தீர்க்கவும் செய்கின்றனர். ஆனால், இந்த நவீன ஆயுதங்களின் தாக்குதல் வழியே நிகழும் மரணாங்கள் அவர்களைத் துணுக்குறச்செய்வது இல்லை.



அல்பக்தாதி

பாலைவனத்தில் மண்டியிட வைத்து கழுத்தைக் கத்தியால் அறுத்து கொலை செய்கின்றனர். அதைப் புகைப்படம், வீடியோ எடுத்து உலகத்தின் பார்வைக்கு அனுப்புகின்றனர். மரணத்துக்கு முந்தைய கணத்தில், அந்த மனிதனின் உறைந்திருக்கும் விழிகள், நம்மால் எதிர்கொள்ள முடியாதவை.

இப்படி எரித்துக் கொல்வது, கூட்டமாகப் படுக்கவைத்துச் சுட்டுக் கொல்வது, மண்டியிடவைத்து கழுத்தை அறுத்துக் கொல்வது என அனைத்துமே இரக்கம் இல்லாதவை. இவற்றை புகைப்படம், வீடியோ எடுத்து, பின்னணி இசை கொடுத்து வெளி உலகுக்கு அறிவிப்பதன் மூலம், உலகத்துடன் ஓர் உளவியல் போரை நிகழ்த்துகின்றனர்.

தங்களைப் பற்றி உலகம் எவ்வாறு கருத வேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிக்கிறார்கள். அந்தப் பதற்றம் ஏற்படுத்தும் அச்சத்தில், அவர்கள் இன்னும் ஒரு படி முன்னேறுகின்றனர்.

ஆனால் இஸ்லாமிய பேரரசில்' வாழ முடியாமல் இதுவரை ஐந்து லட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் ஈராக்கில் இருந்தும், சிரியாவில் இருந்தும் அகதிகளாக வெளியேறி உள்ளனர்.

ஐ.எஸ் அமைப்பு நிகழ்த்தும் கொடூரக் கொலைகளின் விளைவாக, உலகத்தின் பார்வை வெறுப்பாகத்தான் அவர்கள் மேல் விழுகிறது.

பாலைவனத்தில் மண்டியிட வைத்து கழுத்தைக் கத்தியால் அறுத்து கொலை செய்கின்றனர். அதைப் புகைப்படம், வீடியோ எடுத்து உலகத்தின் பார்வைக்கு அனுப்புகின்றனர். மரணத்துக்கு முந்தைய கணத்தில், அந்த மனிதனின் உறைந்திருக்கும் விழிகள், நம்மால் எதிர்கொள்ள முடியாதவை.

இப்படிக் கொன்றுகுவித்துவிட்டு யாரை ஆட்சி செய்யப்போகிறது இஸ்லாமியப் பேரரசு?

www.spiegel.de இணையதளம் வெளியிட்டுள்ள கட்டுரையில் கூறப்பட்டுள்ளதாவது:

1. ஈராக் அதிபராக சதாம் உசேன் இருந்த போது விமானப் படையின் உளவுப் பிரிவு அதிகாரியர்க இருந்தவர் சமிர் அப்த் முகம்மது அல் கலிஃபாவி. இவர்தான் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தின் மூளையாக கருதப்படுகிறார். இவரைத்தான் ஹாஜி பக்கர் என ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் அழைக்கிறது.

2. சதாம் உசேன் ஆட்சிக் காலத்தில் எப்படியெல்லாம் அரசு இயந்திரம் இயங்கியதோ அதே பாணியில்தான் அதாவது கடத்தல், படுகொலை என்ற பாணியில் சிரியாவின் வடபகுதியை ஆக்கிரமித்துள்ளது ஐ.எஸ். இயக்கம்.

3. தமது கைப்பட ஐ.எஸ். இயக்கம் எப்படி கட்டமைக்க வேண்டும்; யார் யாருக்கு என்ன என்ன பொறுப்புகள்; இயக்கத்துக்கான நிதியை எப்படித் திரட்டுவது என்பதை எழுதியிருக்கிறார் ஹாஜி பக்கர்.

3. 2006ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் தடுப்பு காவலில் இருந்தவர் ஹாஜி பக்கர்.

4. 2010ஆம் ஆண்டு பக்கரும் ஈராக் முன்னாள் உளவுத்துறை அதிகாரிகளும் அபு பக்கர் அல் பக்தாதியை இஸ்லாமிய தேசத்தின் அதிகாரப்பூர்வ தலைவராக உருவாக்கினார்கள்..

5. 2012ஆம் ஆண்டு வடக்கு சிரியாவில் நகராங்கள் ஆக்கிரமிக்கப் படுவதை பார்வையிடுவதற்காக ஹாஜி பக்கர் சென்றார். அதன் பின்னர் சவூதி அரேபியா, துனிசியா, செச்சேனியா, உஸ்பெஸ்கிஸ்தான் என வெளிநாடுகளில் இருந்து தீவிரவாதிகளை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்தியவரும் ஹாஜி பக்கர்தான்.

6. 2014ஆம் ஆண்டு சிரியாவில் நடைபெற்ற மோதலில் ஹாஜி பக்கர் கொல்லப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

7. ஹாஜி பக்கர் கொல்லப்பட்ட பின்னர் 2014ஆம் ஆண்டு அவர் வீட்டில் இருந்த ஆவணாங்கள் துருக்கி கடத்தப்பட்டு அங்கிருந்து ஜெர்மனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இவ்வாறு அந்த இணைய தள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே அதி பயங்கரமான இயக்கம் இதுதான் என்று சொல்லப்படும் ஐ.எஸ்.இன் தலைவர் அல்பக்தாதி இறந்துவிட்டாராம்.

இந்தச் செய்தியை முதலில் சொன்னது ஈரான் நாட்டு ஒரு வானொலியாம். அதன்பிறகு பல சர்வதேச ஊடகங்களும் இதே செய்தியை வெ ளியிட்டிருந்தன.

ஆனால் இது பற்றி ஐ.எஸ்.ஸோ இன்னும் வாய் திறக்கவில்லை.

அமெரிக்க விமான குண்டு வீச்சில் படுகாயம் அடைந்த ஐ.எஸ். இயக்க நிறுவுனர் அல் பக்தாதி அதன்பிறகு உயிரிழந்ததாகத்தான் சொல்கிறார்கள்.

ஈராக், சிரியா ஆகிய நாடுகளை தளமாக கொண்டு ஐ.எஸ். இயக்கம் இயங்கி வந்தது. இன்னும் இயங்கிக்கொண்டிருக்கிறது.

அவர்கள் உலகின் பல நாடுகளில் வேரூன்றி உள்ளனர். ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஐ.எஸ்.ஸுக்கு எதிராக, அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை போரிட்டு வருகிறது.

இந்த நிலையில், ஈராக்கில் கடந்த மாதம், அமெரிக்க கூட்டுப்படைகள் நடத்திய வான்வழி தாக்குதலில் ஐ.எஸ். இயக்க நிறுவுனர் அபூ பக்கர் அல் பக்தாதி படுகாயம் அடைந்ததாக செய்திகள் வெளியாகின.

இங்கிலாந்து நாட்டு பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டிருந்தது.

ஈராக் அரசு ஆலோசகர் ஷாம் அல்-ஹஷிமி என்பவரும் இச்செய்தியை உறுதிப்படுத்தினார். கடந்த மாதம் 18ஆம் திகதி, சிரிய எல்லையை ஒட்டியுள்ள அல்-பாஜ் கிராமத்தில் ஒரு குழுவுடன் தங்கி இருந்தபோது, அமெரிக்க கூட்டுப்படை தாக்குதலில் அல் பக்தாதி படுகாயம் அடைந்ததாக அவர் கூறினார்.

தொடக்கத்தில், அல் பக்தாதியின் உயிருக்கு ஆபத்தான அளவுக்கு காயம் இருந்தது. ஆனால், அப்போதிருந்து அவர் மெல்ல மெல்ல குணமடைந்து வருகிறார்.

இருப்பினும், ஐ.எஸ். இயக்கத்தின் அன்றாடப் பணிகளை நிர்வகிக்கும் அளவுக்கு அவர் இன்னும் தயாராக வில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

காயம் அடைந்து சிகிச்சை பெற்றுவந்த அல்-பக்தாதி தற்போது பலியாகினார் என்று ரேடியோ ஈரான் அறிவித்தது.


ஆனால் எந்த ஒரு செய்தி நிறுவனத்தாலும் இது உறுதி செய்யப்படவில்லை.

வெளியில் அதிகம் முகம் காட்டாமல் இருந்த அல்-பக்தாதி ச மொசூல் நகர மசூதியில் நடந்த நிகழ்ச்சியில் கடந்த வருடம் முதல் முறையாக கலந்து கொண்டு பேசினார். முதல் முறையாக வெளியான அந்த வீடியோ, இணையத்தளத்தில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியது.

அமெரிக்காவால் தேடப்படும் தீவிரவாதிகளின் பட்டியலில் இருக்கும் முதல் நபர் அல்-கொய்தா இயக்கத்தின் தல்லைவர் அய்மான் அல்-ஜவாரி.

இரண்டாவது இடத்தில் இருப்பவர் வேறு யாரும் அல்ல, ஈராக், சிரியா அரசுகளின் கண்களில் விரலை விட்டு ஆட்டிக் கொண்டிருக்கும் அபூபக்கர் அல்-பாக்தாதி தான்.

(தொடரும்)



அக்கினிகுமரன்

# முன்னாள் அமைச்சரின் 20 வருட அரசியல்

அண்மையில் இலங்கையின் தேசிய தொலைக்காட்சி ஒன்றில் இடம் பெற்ற கலந்துரையாடல் நிகழ்வில், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். அதன் போது ஒரு சந்தர்ப்பத்தில் முன்னாள் அமைச்சர் தான் அரசியலில் 20 வருட அனுபவம் உள்ளவர் எனவும் அதன் அடிப்படையில் தமிழ் மக்க ளுக்கு ஏராளமான சேவைகளைச் செய்துள் ளதாகவும் தெரிவித்தார். அதேவேளையில், அதற்கு முன்னைய காலத்தில் ஆயுதப் போராளியாக அனுபவம் பெற்றதை அவர் குறிப்பிடத் தவறிவிட்டார். மேலும் சுமந்திரனுக்கு குறுகியகால அரசியல் அனுபவமே உண்டு என்பதையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அந்த அனுபவமும் அதன் மூலம் அவர் கற்றுக் கொண்ட பாடங்களும் அரசியலைக் கையாண்ட வழிமுறைகளும் எப்படியிருந்த போதிலும் அவர் அரசியலில் ஒரு பழுத்த அனுபவசாலி என்பதை எவரும் ஏற்றுக்கொள்ளாமல் விடமுடியாது.

எனினும் அவர் தனது நீண்ட அரசியல் அனுபவத்தின் மூலம் வெளியிட்ட சில கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகத் தெரியவில்லை. அதாவது தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுகள் காரணமாகவே இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் பல விடுவிக்கப்பட்டன என அவர் தெரிவித்தார். அதே வேளையில் குறுகிய அரசியல் அனுபவம் கொண்ட வழக்கறிஞர் சுமந்திரன் , தாங்கள் காணிகளை விடுவிக்கக் கோரி நடத்தும் வழக்குகளின் காரணமாகவே காணிகள் விடுவிக்கப்பட்டன எனத் தெரிவித்தார்.

இன்னும் பெரும் பங்கு விடுவிக்கப் படாத நிலையில் விடுவிக்கப்பட்ட காணிகளை மீட்டெடுத்த பெருமை க்கு உரிமை கோரிக்கொண்டனர். இதுஅவர்களின்சொந்த அடிப்படையிலான அரசியல் அனுபவம் போலவே தோன்றுகிறது.

ஆனால் இவர்களின் கருத்துக்களுக்கு அப்பால் உலகமறிந்த நிலை உண்டு. போர் முடிந்த காலப்பகுதியிலிருந்து தமிழ் மக்கள் படையி னரால் ஆக்கிமிக்கப்பட்ட தமது சொந்த நிலங்களை விடுவிக்க வேண்டும் எனக் கோரிப் பல ஜனநாயகப் போராட்டங் களைத் தொடர்ச்சியாக நடத்தி வருகி ன்றனர். சில போராட்டங்களைத் தலைமையேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்தினர். மக்களால் இயல்பாக நடத்திய போராட்டங்களிலும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கினர்.

இப்படியான சந்தர்ப்பங்களில் டக்ளஸ் தேவானந்தா கூட்டமைப் பினர் இப்படிப் போராட்டங்களைநடத்தி எல்லா வற்றையும் குழப்பியடிக்கின்றார் எனக் கூப் பாடு போட்டன. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனக் கருதப்பட்ட சிலரும் படையினருடன் சேர்ந்து இயங்கிய சில ஆயுதக்குழுக்களும் போராடும் மக்களிடையே புகுந்து குழப்பங்களை விளைவித்தமையையும், கழிவு ஓயில் அபிசேகம் செய்தமையையும் மறந்து விட முடியாது.

ஆனால் மக்களின் இத்தகைய போராட்டங்களே, மஹிந்த அரசு அத்தனை வீதம் விடுவி த்து விட்டோம்.இத்தனை வீதம் விடுவித்துவிட்டோம் என உலகை ஏமாற்ற முன் வைத்த பொய்மைகளை அம்பலப்படுத்தின. சர்வதேச நாடுக ளும் மனித உரிமை நிறுவனங்களும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலையை உருவாக்கின. ஐக்கிய நாடுகள் சபையில் கூட இந்தப் போராட்ட ங்களின் எதிரொலி இலங் கைப் பிரதிநிதிகளைச் சிதறடித்தது.

இந்த நிலையில் தான் மஹிந்த அரசு சிறிய பகுதிகளையும் கண்துடைப்பு நடவடிக்கையாக விடுவித்தது. நிச்சயமாக டக்ளஸ் மஹிந்த முன்பு பணிந்து தலையைச் சொறிந்து விட்டு வந்ததால் அல்ல.- டக்ளஸ் இப்படியான விடயங்களை மஹிந்தவுடன் பேசி எப்படித் தீர்வு கண்டார் என்பதை தமிழ் மக்கள் ஏற்கனவே அறிந்துள்ளனர்.

சில வருடங்களின் முன்பு சில சிங்களக் குடும்பங்கள் ,தாம் ஏற்கனவே யாழ்ப்பாணத் தில் குடியிருந்தவர்கள் எனவும் தங்களை மீண் டும் யாழ்ப்பாணத்தில் குடியேற்ற வேண்டும் எனக் கோரி யாழ். ரயில் நிலையத்தில் வந்து தங்கினர். அவர்களை வெளியேற்ற யாழ்.மாவட்ட அரச அதிபர் முயற்சிகளை மேற்கோண்ட போது டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு ஜனாதிபதியுடன் பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகத் தெரிவித்தார், அவர் பேசி முடிக்கும் முன்பே படையினரின் உதவியுடன் நாவற் குழி யில் குடியேறிவிட்டனர். ஜனாதிபதியுடன் பேசினா ரோ இல்லையோ, ஜனாதிபதி பகிரங்கமாகவே கொழும்பில்தமிழர்கள்குடியிருக்கமுடியுமானால் யாழ்ப்பாணத்தில் ஏன் சிங்களவர் குடியேற முடியாது எனக் கேள்வியை எழுப்பி விடய த்தை முடித்துவிட்டார். இன்று நாவற்குழியில் சகல வசதிகளுடன் சிங்களக் குடியேற்றம் உருவாகி விட்டது.

அதாவது அவர் ஜனாதிபதியுடன் பேசுவது என்பது மக்கள் எதிர்ப்பை மழுங்கடித்து ஆறப் போட்டு பின் அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக் கைகளை நிறைவேற்ற வழி கொடுப்ப கேயாகும்.அதற்கு இது ஒரு உதார ணம் ாட்டுமே.

இவர் மக்களின் பிரதிநிதியாக அரசில் அமைச்சராகப் பதவி வகிக்க வில்லை,அரசின் முகவ ராக மக்களை ஏமாற்றி வந்தமை தான் இவரது 20 வருட அரசியல்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியது போன்று நீதி மன்ற நடவடிக்கையால்தான் காணிகள்விடுவிக்கப்பட்டால்எங்கே எப்போது இடம்பெற்றது?மாவை சேனாதிராஜாவும, ம்மலும் ஏறக் குறைய 2000 பேரும் தமது காணிகளை விடு விக்கும்படி கோரி வழக்குத் தொடுத்தனர். அரச அதி பர் அறிக்கை எனவும், சட்டமா அதிபரின் ஆலோசனை எனவும்வழங்கி வருடங்களை விழுங்கிக் கொண் டிருக்கின்றது. ஆனால் வழக்கு இடம் பெறும் போதே வீடுகள் இடிக்கப்பட்டன. புதியவேலிகள்அமைக்கப்பட்டன. ஒரு இடைக் காலத் தடை கூட வழங் கப்பட வில்லை. சம்பூரில் வழக்குத் தொடுக்கப் பட்டாலும் மக்கள் போராட்டங்களை தீவிரமாக ஆரம் பித்ததும் பிரதேச காணிகளை விடு விக்கும்படி வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

அதாவது காணிகள் விடுவிக்கப்பட்டதும் இனம்விடுவிக்கப்படுவதும் போராட்டங்கள்மூலம் மட்டுமேயொழிய எந்த ஒரு நபரின் தனி முயற்சியினாலுமல்ல. எல்லாவற்றிலும் மேலாக தமிழர் நிலங்களை ஆக்கிரமித்த மஹிந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்பியமை யினால் தான் இன்று காணிகள் விடுவிக்கப்படும் சூழ்நிலை ஏற் பட்டது என்பதை எவரும் மறுத்து விட முடியாது. இது மக்கள் நடத்திய வலிமையான் போராட்ட மாகும்.

20 வருட அரசியலில் என்றால் என்ன 200 வருட அரசியல் என்றால் என்ன, மக்க ளுக்கு விமோசனம் மக்கள் அவர்களின் போராட்டத்தின் மூலமே அன்றி வேறு எவ்வகைகளிலுமல்ல!

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# உள்ளார்ந்து உணர்ந்து செயற்பட வேண்டியவேளை

நாடாளுமன்றம் இன்று கலைகிறது நாளை கலைகின்றது என எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தி ஒருவாறாக கலைத்து விட்டது புதிய அரசு.

புதிய அரசாங்கம் பதவியேற்று தனது 100 நாள் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. அதில் தமிழ் மக்களுக்கு திருப்திகரமான எந்தச் செயற்பாடும் இடம்பெறவில்லை என்பது மிகவெளிச்சம்.

ரணிலைப் பிரதமர் ஆக்கிய மைத்திரிபால சிறிசேன தற்போது இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளார். அதாவது தன்னை ஜனாதிபதியாக்க உதவிய ஐ.தே.கட்சியை கைவிட்டுவிடுவதா? தான் அங்கம் வகிக்கும் - தலைமையேற்று நடத்தும் - சுதந்திரக்கூட்டமைப்பைக் காப்பாற்றுவதா என்று மண்டையைக் குழப்பிக் கொண்டிருக்கின்றார்.

இந்த நிலையில், மஹிந்தவின் மீள்வருகையும் அவருக்கு பெருந்தலையிடியை ஏற்படுத்தியிருக்கின்றது. மஹிந்தவுக்கு சு.கூட்டமைப்பில் வேட்புமனு இல்லை என அடித்துக் கூறிய ஜனாதிபதிக்கு, பெரும் நெருக்கடியைக் கொடுக்கும் வகையில் மஹிந்தவின் ஆதரவாளர்கள் செயற் படுகின்றனர். இதனால் சுதந்திரக் கூட்டமைப்பு மைத்திரியின் ஆதரவாளர்கள் ஒரு புறமும் மஹிந்தவின் ஆதரவாளர்கள் மறுபுறமும் என கட்சி இரண்டாகப் பிளவு அடையக்கூடிய ஏது நிலை தோன்றியுள்ளன.

இதனைத் தவிர்க்கும் முகமாக மைத்திரி - மஹிந்த ஒரு உடன்பாட்டை எட்ட வேண்டும் என சு.கட்சியின் உறுப்பினர்கள் மைத்திரிக்கு நெருக்குதல்களைக் கொடுத்துவருகின்றனர்.

மைத்திரியை ஜனாதிபதியாக்குவதற்கு காரணமாக இருந்த சந்திரிகா தலைமையிலான அரசியல் வாதிகள், மஹிந்த மீண்டும் அரசியலில் பிரவேசிப்பதை சற்றேனும் விரும்பவில்லை. அத்துடன் மீண்டும் மஹிந்த ஆட்சிக்கு வந்தால் அவரது ஆட்சிக்காலத்தில் நடந்ததை விட மேலும் படுமோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டும் எனவும் எதிர்வு கூருகின்றனர்.

இதேவேளை மஹிந்தவுக்கு ஆதரவு அளிப்பவர்கள் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை - ஊழலுக்கு எதிரான விசாரணைகளை - எதிர்கொள்வதற்குப் பயந்தே அவருக்கு ஆதரவளிப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் அரசல் புரசல்களாக மேலெழுகின்றன.

ரணில் பிரதமராக இருப்பதை விரும்பாதவர்களும், மைத்திரியின் அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து தங்களுக்குச் சாதகமான அரசியல் களத்தை உருவாக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்பவர்களும், அவர்களுக்கு எதிரான சக்திகளைப் பலப்படுத்துவதில் முனைப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

சிறுபான்மையினராகிய தமிழர்,முஸ்லிம்கள் தங்களுக்குள் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்தி தங்களைப் பலப்படுத்துவதில் எந்தவிதமான முன்னேற்றத்தைம் எட்டியதாகத் தெரியவில்லை.

எது எவ்வாறாக இருப்பினும், பெரும்பான்மையினர் தக்க நேரத்தில் தமக்குள் ஒற்றுமையுடன் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்குவதை கடந்தகால வரலாறுகள் ஊடாகக் காணலாம். ஆனால் சிறுபான்மையினரோ, தங்களுக்குள்ளே பிரிவினையை ஏற்படுத்தி மோசம் போவது வழமையாகிவிட்டது.

சிறுபான்மையினர் ஒற்றுமையுடன் தங்களுக்குள் ஓர் உடன்பாட்டினை ஏற்படுத்தி, தங்களுக்கான உரிமைகளைப் பெற்றிட இந்தச் சந்தர்ப்பத்தை தவறாது பயன்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு உண்டு. அதனை உள்ளார்ந்து உணர்வது இப்போதைய தேவை.

# முன்னாள் அமைச்சர்களின் முதலைக்கண்ணீர்

**- அக்கினிக்குமரன்**

முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், பிரதி மகளிர் விவகார அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாட்டின் பாதுகாப்புக்கு



அச்சுறுத்தலாக விளங்குகின்றனர் எனப் பாரிய குற்றச்சாட்டொன்றைச் சுமத்தியுள்ளார்.

இவர்கள் அப்படியொன்றும் ஆயுதப் போராட்ட அமைப்புகளுடன் தொடர்பு கொண்டவர்களோ அல்லது ஒரு



இராணுவ சதிப்புரட்சியை நடத்துமளவுக்கு தொடர்புகளோ வல்லமையோ கொண்டவர்களல்ல. எனினும் கூட இவர்கள் முன்னாள் அமைச்சர் கண்களில் ஆபத்தான பேர்வழிகளாகத் தெரிந்துள்ளனர். காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் என்று சொல்லுவர்ர்கள். இங்கோ இனவாத மஞ்சள் அரசியலுக்குள் மூழ்கிப் போய்விட்ட பலருக்கு மரத்தில் பழுத்த இலை நிலத்தில் விழுந்தாலும் அதுகூடப் பாதுகாப்புக்குப் பங்கம் என ஒப்பாரி வைக்குமளவுக்கு உளறும் நிலை ஏற்பட்டுவிட்டது.

சுவாமிநாதன் மேலும் விஜயகலா மகேஸ்வரன் மீதும் இவர்கள் கண்டுபிடித்த பாரிய குற்றம் அவர்க்ள் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் அக்கறை காட்டுகிறார்கள் என்பதுதான்.

வலி . வடக்கிலும், சம்பூரிலும் போர் காரணமாக வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களை அவர்களின் சொந்தக் காணிகளில் குடியேற்ற முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டு வருவதுதானாம் அவர்களின் பாதுகாப்பு விரோத நடவடிக்கைகள். இதில் மக்களின் காணிகளில் ஒரு பகுதி மட்டுமே விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வலி. வடக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட 6000 ஏக்கரில் 1000 ஏக்கர் மட்டுமே விடுவிக்கப்படுவதாக வாக்களிக்கப்பட்டது. எனினும் கூட 563 ஏக்கரே விடுவிக்கப்பட்டுள்ளது. சம்பூரில்கூட 528 ஏக்கர் காணிகளே விடுவிக்கப்படவிருந்தது. அதுவும்கூட நீதிமன்ற உத்தரவின் மூலம் தடை செய்யப்பட்டு விட்டது. அப்படியான நிலையில் கூட, பீரிஸ் அவர்களுக்கு பாதுகாப்புப் பற்றிய கவலை மேலோங்கி விட்டது.

ஒருவன் தனது சொந்தக் காணியில் வசிப்பது என்பது அவரின் அடிப்படை உரிமை. அவரது சொந்தக் காணியில் வேறுயாராவது அவரின் சம்மதமின்றி உட்புகுந்தால் "எல்லை தாண்டும் அத்துமீறல்" என்ற சட்ட விரோத நடவடிக்கை.

போரையும், பாதுகாப்பையும் காரணம் காட்டி இராணுவம் அந்தச் சட்டவிரோத

அத்துமீறலை நடத்தியது. இப்போது போர் முடிந்து 6 வருடங்களாகின்றன. இனி அங்கு இராணுவம் இருக்க வேண்டிய தேவையில்லை.

ஆனாலும் கூட எந்த ஒரு இராணுவ முகாமும் அகற்றப்படாமலேயே வலி வடக்கில் மக்கள் குடியேற்றப் பட்டனர். மக்கள் குடியேறிய பகுதியிலேயே 50 ஏக்கரில் இரு பெரும் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளன. அப்படியிருந்தும் ஜீ.எல்.பீரிஸ‍க்கு பாதுகாப்புத் தொடர்பான அச்சம் ஏற்பட்டுள்ளது என்றால் அது நிச்சயமாக உண்மையானதும் நேர்மையானதுமாக இருக்க முடியாது. அதாவது தமிழ் மக்களைத் தங்கள் சொந்தக் காணிகளில் குடியேற அனுமதிக்காது, அந்தக்காணிகளை மோசடியாக அபகரிக்கும் மூன்றாம் தர அடாவடித்தனம் கொண்ட பச்சைக் காடைத்தனமே இது. இந்த அநாகரிகத்தில் தன்முகத்தைக் காட்டியிருப்பவர் ஒரு முன்னாள் பல்கலைக்கழகப் பேராசிரியர் என்பதுதான் அதி உயர் வெட்கக்கேடு. இப்படியான நியாயங்களுக்கு எதிரான சட்டவிரோத நடவடிக்கைகள் பகிர நிற்கும் ஒருவர் இலங்கையில் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்தார் என்றால் சர்வதேச அரங்கில் இலங்கையின் தரம் தாழ்ந்து போவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்.

கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் ஊழல், மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகம் என்பவற்றில் ஈடுபட்டவர்கள் அம்பலப்பட்டு வருகின்றனர். பொதுமக்கள் பணத்தைக் கோடிகோடியாகக் கொள்ளையடித்தவர்கள் விசாரணைப் பிரிவிலும், நீதிமன்றங்களிலும் படியேறி இறங்கி வருகின்றனர். எத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளை யும் தயங்காது செய்தவர்களின் குற்றங்கள் வெளிப்பட்டு வருகின்றன.

அதே குற்றவாளிகள் தமிழர் நிலங்களைப் போரின் பேரால் அபகரித்தனர். அதில் ஒரு பகுதி திருப்பி வழங்கப்படும் போது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு விட்டதாக முதலைக் கண்ணீர் வடிக்கின்றார் பீரிஸ்.

அடிப்படையில் அவர்கள் இலக்கு பாதுகாப்பல்ல, தமிழ் மக்களின் சொந்த நிலங்களைப் பறித்து அவர்களை அகதிகளாக்கி விட்டு முழுநாட்டையும் சிங்கள மயப்படுத்துவதே!

பீரீஸ் அவர்களைப் போன்றே முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவும் முதலைக் கண்ணீரை ஆறாக வடித்திருக்கிறார். அதாவது போரை வெற்றி கொண்டவர்களை தற்போதைய அரசாங்கம் பழி வாங்குகிறதாம். அதாவது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கடவுச்சீட்டைப் பறித்து அவர் வெளிநாடு செல்வதை அரசாங்கம் தடை செய்துவிட்டதாம்.



கோத்தபாய போரை வெற்றி கொண்டமைக் காகவோ, போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், காரணமாகவோ விசாரிக்கப் படவில்லை. மாறாக ஊழல் மோசடி தொடர்பாகவே விசாரிக்கப்படு கின்றார்.

ஏற்கனவே 10 இலட்சம் டொலர் விலை பேசப்பட்ட மிக் விமானத்தை 25 டொலர் கொடுத்து கொள்முதல் செய்தமை தொடர்பாக வும், இலங்கை அரசுக்கும் உக்ரேன் அரசுக்கும் இடை யேயுள்ள வர்த்தகம் என்று சொல்லப் பட்டாலும் கொடுக்கல் வாங்கல் இல்லாத ஒரு நிறு வனத்தின் பேரால் இடம் பெற்றமை யும் பற்றியே விசாரணை இடம்பெற்று வருகின்றது.



போரின் வெற்றிக்கு ஊழல் மோசடிக்கும் என்ன சம்பந்தம்? போரை வெற்றி கொண்டவர்கள் என்பதால் மக்கள் பணத்தைக் கொள்ளையிடச் சட்டம் இடம் கொடுக்கின்றதா? அதாவது தங்கள் குற்றங்களை மறைக்கப் போர் வெற்றியை இழுத்து முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

தமிழ் மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் குடியேறுவது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கண்ணீர் வடிக்கும் பீரிஸ் அவர்களுக்கு ஏனோ கோத்தபாய அவர்களின் அனுசரணையில் இயங்கிய மிதக்கும் ஆயுதக் களஞ்சியமும், பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்திருந்த இரகசிய ஆயுதக்களஞ்சியசாலையும் ஏன் கண்ணில்படவில்லை?

அடிப்படையில் முன்னாள் அமைச்சர்களுக்கோ மஹிந்த ஆதரவாளர்களுக்கோ பாதுகாப்பல்ல. உண்மையான பிரச்சினை. பாதுகாப்பு அச்சுறுத்தல், புலிகளின் மீளெழுச்சி எனச் சொல்லிச் சொல்லியே தமது குற்றங்களை சிங்கள மக்களிடம் மறைத்து மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றவே இவர்களின் முதலைக்கண்ணீர் வடிப்பு அரங்கேற்றப்படுகிறது.



**அட்டைப்படம்**

**சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல்போனோர் தொடர்பிலான உண்மைத்தன்மையை அரசு அறிவிக்க வேண்டும் எனக்கோரி யாழ்.பல்கலைக் கழகத்திற்கு முன்னால் நடந்த கவன யீர்ப்புப் போராட்டம்.**



# விண்வெளியில் போர்

- வேல் தர்மா

**சீனாவிடமிருந்தும் ரஷ்யாவிடமிருந்தும் விண்வெளியில் உருவாகியுள்ள சவால்களை சமாளிக்க அடுத்த ஆறுமாதங்களுக்குள் Spaced War Center எனப்படும் விண்வெளிப் போர் நிலையம் அமெரிக்காவால் திறக்கப் படவிருக்கின்றது.**

ஐக்கிய அமெரிக்கா அவசர அவசரமாக Spaced War Center எனப்படும் விண்வெளிப் போர் நிலையம் ஒன்றைத் திறக்கவிருக்கின்றது. தற்போது அமெரிக்காவின் வான் படையின் செயலராக இருக்கும் டெபரா ஜேம்ஸ் விண்வெளிப் போர் தொடர்பாக அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செயலர் அஸ்டன் காட்டருக்கு ஆலோசகராக விரைவில் நியமிக்கப்படவிருக்கின்றார்.

சீனாவிடமிருந்தும் ரஷ்யாவிடமிருந்தும் விண்வெளியில் உருவாகியுள்ள சவால்களை சமாளிக்க அடுத்த ஆறுமாதங்களுக்குள் Spaced War Center எனப்படும் விண்வெளிப் போர் நிலையம் அமெரிக்காவால் திறக்கப்படவிருக்கின்றது.


2016 ஆம் ஆண்டிற்கான அமெரிக்கப் பாதுகாப்புச் செலவீனத்தில் ஐந்து பில்லியன் டொலர்கள் விண்வெளிப் பாதுகாப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது. இதில் 21 மில்லியன் டொலர்கள் அமெரிக்க கடற்படைக்கான தொடர்பாடல் செய்மதிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. இது கடந்த ஆண்டில் செய்யப் பட்டதிலும் பார்க்க இரண்டு மடங்காகும்.

விண்வெளிப் போர் நிலையத்தில் அமெரிக்கா காட்டும் அவசரம் சீனாவிடமிருந்தோ அல்லது ரஷ்யாவிடமிருந்தோ ஒரு காத்திரமான அச்சுறுத்தல் உருவாகி விட்டது என்பதைக் காட்டுகின்றது. அண்மைக்காலங்களாக ரஷ்சிய உயர் அதிகாரிகள் பகிரங்கமாகவே அமெரிக்காவை அணுக்குண்டுகளால் தாக்கத் தம்மால் முடியும் எனத் தெரிவித்து வருகின்றனர். ஒரு ரஷ்சிய படைத்துறை நிபுணர் ரஷ்சியாவால் மட்டுமே ஐக்கிய அமெரிக்காவை ஒரு அணுக்குண்டால் அழிக்கப் பட்ட குப்பை மேடாக மாற்ற முடியும் எனத் தெரிவித்திருந்தார். ரஷ்சிய அதிபர் விளடிமீர் புட்டின் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக அக்கறையை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மீது காட்டுகின்றார். 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு ஆரம்பத்தில் சீனா, ரஷ்சியா, கஜகஸ்த்தான், தஜிகிஸ்த்தான், ஆகிய நாடுகள் இணைந்தன. பின்னர் உஸ்பெக்கிஸ்த்தான் 2001ஆம் ஆண்டு இணைந்து கொண்டது. இந்த அமைப்பில் பெலரஸ், துருக்கி, இலங்கை ஆகிய நாடுகள் இதில் உரையாடக் கூடிய நாடுகளாகவும் இந்தியா, பாகிஸ்த்தான், ஆப்கானிஸ்த்தான், மொங்கோலியா, ஈரான் ஆகிய நாடுகள் பார்வையாளர் நாடுகளாகவும் இருக்கின்றன. மத்திய ஆசிய நாடுகளிடை நெருக்கடிகளைத் தவிர்க்க உருவ [redacted] ஷாங்காய் ஒத்துழைப்பு [redacted] து ஒரு படைத்து [redacted] உருவா [redacted] இது ரஷ் [redacted] விமர்சிக்க [redacted] இந்தியா, ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் முழு உறுப்புரிமையுடன் இணைந்து கொண்டால் இது உலக மக்கள் தொகையில் அரைப்பங்கு மக்களைக் கொண்ட அமைப்பாகும்.

மற்ற நாடுகளின் செய்மதிகள் அமெரிக்கப் படைத்துறை இலக்குகளைப் பூமியில் வைத்தோ அல்லது விண்வெளியில் உள்ள அமெரிக்க செய்மதிகளை இலக்கு வைத்தோ தாக்குதல் செய்ய முடியாதபடி பார்த்துக் கொள்வதும் அமெரிக்காவின் செய்மதிகளை ஒன்றிணைப்பதும் விண்வெளிப் போர் நிலையத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும். விண்ணில் இருக்கும் செய்மதிகளை தரையில் இருந்து ஏவுகணைகளை வீசி அழிக்கும் திறனைப் பல ஆண்டுகளுக்கு முன்பே சீனா பெற்றுவிட்டது.

2015 ஜூன் 25 ஆம் திகதி அமெரிக் காவின் பிரதிப் பாதுகாப்புத் துறைச் செயலர் Bob Work ரஷ்சியாவின் அணுக்குண்டு மிரட்டல்களுக்கு அனுமதிக்க மாட்டோம் என்றார். ரஷ்யா IntermediatedRange Nuclear Forces Treaty, எனப்படும் நடுத்தர தூர அணுக்குண்டுப்படைகள் தொடர்பான உடன்படிக்கையை மீறுவதாகக் குற்றம் சாட்டும் Bob Work ரஷ்யாவை ஒரு அடக்கப்பட்ட நிலைக்கு தம்மால் இட்டுச் செல்ல முடியும் எனவும் சூளுரைத்தார். எக்காரணம் கொண்டும் நடுத்தர தூர அணுக்குண்டுப்படைகள் தொடர்பான உடன்படிக்கையை மீறுவ தால் ரஷ்யா ஒரு மேலாண்மையைப் பெற நாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என உறுதி கூறினார். பனிப்போர்க் காலத்தில் இருந்தே ரஷ்யாவும் அமெரிக் காவும் விண்வெளியில் படைத்துறைப் போட்டியில் ஈடுபட்டுள்ளன. ஆனால் இத்துறையில் சீனாவும் காலடி எடுத்து வைத்தமை ஒரு புதிய களத்தை அமெரிக்காவிற்கு திறக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல்கேரியா, எஸ்த்தோனியா, லத்வியா, போலாந்து, லித்துவேனியா, ருமேனியா, ஜேர்மனி ஆகிய ரஷ்யாவைச் சுற்றியுள்ள நாடுகளில் ஐக்கிய அமெரிக்கா தனது படைவலுவை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. உக்ரேனில் மேற்கு நாடுகளுக்கும் ரஷ்யாவிற்கும் இடையில் முறுகலை உருவாக்கியது போல் மெசடோனியா (முன்னாள் யூக்கோஸ்லா வியக் குடியரசு) நாட்டிலும் ஒரு போட்டி உருவாகியுள் ளது. 1991 ஆம் ஆண்டு யூக்கோஸ்லாவியாவில் இருந்து சுதந்திரம் பெற்ற மெசடொனியா கிரேக்கத்தின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் 2004 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்புரிமை கோரி விண்ணப்பித்தது. இன்னும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அது உறுப்புரிமை பெற வில்லை. இதே போல் நேட்டோப் படைத்துறைக் கூட்டமைப்பிலும் மெசடோனியா இணைய விண்ணப்பித்துள்ளது. இதையும் கிரேக்கம் எதிர்த்தது. மெசடோனியா என்னும் பெயர் கொண்டிருப்பதால் அது தன்னுடைய பிராந்தியத் தையும் உரிமை கொண்டாடலாம் என கிரேக்க நாடு கருதுகின்றது. தனது முன்னாள் செய்மதி நாடான மெசெடோனியா ஐரோப்பிய ஒன்றியத்திலும் நேட்டோவிலும் இணைய விரும்புவதை ரஷ்யா மிகக் கரிசனையுடன் பார்க்கின்றது. இதனால் உக்ரேனில் 2014ஆம் ஆண்டு இருந்த நிலை இப்போது மெசெடோனியாவில் நிலவுகின்றது. அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் 2003ஆம் ஆண்டில் ஜோர்ஜியாவிலும் 2005 ஆம் ஆண்டு உக்ரேனிலும் 2009ஆம் ஆண்டு மோல்டோவாவிலும் செய்த ஆட்சி மாற்றத்தை தற்போது மெசெடோனியா வில் செய்ய முயல்வதாக ரஷ்யா கருதுகின்றது. இது போல ஒவ்வொரு முன்னாள் ரஷ்யச் செய்மதி நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்திலும் நேட்டோப் படைத்துறைக் கூட்டமைப்பிலும் இணைவதால் ரஷ்யாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையில் மோசமாகப் போகும் முறுகல் நிலை ஒரு படைத்துறைப் போட்டியை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது அதன் ஓர் அம்சமாகவே ஐக்கிய அமெரிக்காஅவசர அவசரமாக Spaced War Center எனப்படும் விண்வெளிப் போர் நிலையம் ஒன்றைத் திறக்கவிருக்கின்றது.



# குழை வண்டிலில் வந்தவர் யார்..?

- சயந்தன்

தம்பி ஒரு 'கொமிக்' சொல்லுறன். 'எலக்ஷன்' நடந்ததெல்லே, முல்லைத்தீவுப் பக்கமா வெத்திலையில வோட்டுக்கேட்ட அரசாங்கக்கட்சி ஆளொருவர், 'எலக்ஷனு'க்கு ரண்டு மூண்டு நாளுக்கு முதல், வீட்டு வசதிகள் சரியாக் கிடைக்காத கொஞ்ச சனத்துக்கு கூரைத் தகரங்களை அன்பளிப்பாகக் கொடுத்து, வீட்டுக்குப் போடுங்கோ என்று சொன்னவராம். சனமும், நீங்கள் தெய்வமய்யா என்று கும்பிட்டு வாங்கிக்கொண்டு போச்சினமாம். ஆனால் 'எலக்ஷனில' ஆள் தோத்திட்டார். கூரைத்தகடு வாங்கின ஆக்களின்ரை 'வோட்டு' விழுந்ததே சந்தேகமாம். ஆள் கொஞ்சம் கோபத்தோட போய், 'நீங்களெல்லாம் என்ன மனிசர். பல்லை இளிச்சு வாங்கிக்கொண்டுபோயிற்று கழுத்தை அறுத்திட்டியளே' என்று திட்டினாராம். சனம் ஒண்டும் விளங்காமல், 'ஐயா நீங்கதானே வீட்டுக்குப் போடச்சொன்னியள் என்று இழுத்திச்சினமாம்.'

இந்தக் கதையை எனக்குச் சொன்னவர் எனது பெரியப்பா. இன்னும் இரண்டு வருடத்தில் எழுபது வயதாகிறது. தச்சுவேலை செய்கிறார். கோப்பிச வேலைகளில் (கூரை வேலைகள்) 'ஸ்பெஷலிஸ்ற்'. மேற் சொன்ன கதை நிச்சயமாக ஒரு புனைவுதான். நிச்சயமாக பெரியப்பாவே புனைந்திருப்பார். எங்கள் வீட்டில் நாங்கள் இரண்டு பேர்தான் புனைவாளர்கள். அந்த நேரத்தில் ஆழ்ந்த வாசிப்புப் பழக்கம் கொண்டிருந்தவரும் அவரே. (சென்ற வருடம் அ. இரவி அண்ணா வீட்டிற்கு வந்திருந்தார். அவர் அப்பாவிடம் - சயந்தன் எழுதுறதுகளை வாசித்திருக்கிறியளா? என்று கேட்டார். அப்பா தலையைச் சொறிந்து கொண்டே, என்னமோ எழுதுறான்தான். சந்தோசம்தான். ஆனால் வாசிக்கிறதில்லை என்றார். திடீரென்று இரவியண்ணை நீங்களும் ஒரு மனிசரோ என்று பொரிந்துதள்ளத்தொடங்க அப்பா திகைத்துப் போய்விட்டார். அப்பிடி அப்பா 'டோஸ்' வாங்கிக்கொண்டிருந்தபோது பக்கத்தில் நின்ற 'வெர்ஜினி'யாவை காணவேயில்லை. அடுத்தது தனக்குத்தான் என்றோ என்னவோ ஓடி ஒளிந்துவிட்டார். மறுநாள் காலை இரவியண்ணை போனபிறகு, அப்பா சொன்னார். இப்பிடி ஆக்களைக்கூட்டிக்கொண்டு வந்து பேச்சு வாங்கித்தராதை .

பெரியப்பாவைப்போல நிறையக்கதைகளைப் புனையும், மனிதர்களை கிராமங்கள் தமக்குள் வைத்திருக்கின்றன. அவற்றை புனுகுகள் என்று கடந்துபோய்விட முடியுமென்று தோன்றவில்லை. எதிர்காலத்தினுடைய நாட்டார் கிராமியக் கதைகள் இவைகளாகத்தான் இருக்குமோ என யோசிக்கின்றேன். எப்படியாவது இவை தமக்குரிய இடத்தை எடுத்துக்கொள்ளும்.

ஊரில் இன்னொரு சுவாரசியமான மனிதர் இருக்கிறார். சீனியர் என்று பெயர். ஒருமுறை நாங்கள் சிறுவர்கள் வைரவர் கோயிலில் இருந்து ஏவிய.. (இந்த வார்த்தை கொஞ்சம் அதிகப்படியானதோ) ஈர்க்குவாணம் அவரது வீட்டில் விழுந்து மனைவியையோ மகளையோ அச்சப்படுத்தியது என்று விரைந்துவந்து எங்கள் ஆறுபேரையும் கைதுசெய்து சந்தியில் நிறுத்தியிருந்தார். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அம்மாவோ அப்பாவோ வந்தே பிள்ளைகளை அழைத்துச்செல்லவேண்டுமென்பது அவரது ஆணை. ஆனாலும் அச்செய்தியை அந்த வீடுகளுக்கு தெரியப்படுத்த வேண்டுமல்லவா. என்னைத்தான் அனுப்பினார். பிறகு என்ன நடந்திருக்குமென்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

சீனியர் அவ்வளவு மோசமில்லை. சங்காபிஷேகத்து முதல்நாள் இரவு கோயிலில்தான் படுத்திருப்போம். சிறு பையன்களைக் கட்டிமேய்க்கிறது அவர்தான். வண்டிவண்டியாகக் கதை சொல்லுவார். அப்படியொருமுறை சொன்ன கதைதான் இது.

இந்தியன் ஆமிக்காலமடா, மயிர். இந்தியன் ஆமியெண்டா எனக்கென்ன. நான் விடிய நாலு மணிக்கு எழும்பி றோட்டு முழுக்கத்திரிஞ்சு பூ பிடுங்கிக்கொண்டு வருவன். அப்பிடியொருநாள் பூப்பிடிங்கிக்கொண்டு வாறன், ஒரு குழை வண்டில் 'புல் லோட்டோட' வருகுது. (விவசாய நிலத்தில் பசளைக்கு பாவிக்க இலைகுழைகளை ஏற்றிய மாட்டு வண்டில்கள் அதிகாலையிலேயே புறப்பட்டுவிடும்). மாடு ரண்டும் குதிரைமாதிரி. ஆளைப்பாத்தால் அந்த மீசையை எங்கயோ கண்டமாதிரிக் கிடக்கு. தலைப்பா கட்டியிருந்ததால 'டக்'கெண்டு பிடிபடலை. பக்கத்தில வந்து சரக் என்று 'பிரேக்' அடிச்சார். (இதனால் அன்றுமுதல் மாட்டுவண்டிலுக்கு பிரேக் அடித்த சீனியர் என்றும் அவர் அறியப்படலானார்). கையைக்காட்டி சீனியர் எப்பிடிச் சுகங்கள். மன்னிக்கோணும். கதைக்க நேரமில்லை. நிறைய அலுவல், பிறகொருநாளைக்குச் சந்திக்கிறன் என்றுபோட்டு கிர் கிர் என்றார். மாடு ரண்டும் புழுதியைக்கிளப்பிக்கொண்டு பறந்திச்சு. எனக்கு அப்பதான் 'டக்' கெண்டு விளங்கிச்சு. அது ஆரு தெரியுமோ. சீனியர் இந்த இடத்தில் நிறுத்தி எங்களையெல்லாம் பார்ப்பார்.

டேய் அது தம்பி பிரபாகரன்டா. குழை வண்டில் முழுக்க ஆயுதங்களைத்தான் அடைஞ்சு கொண்டுபோயிருக்க வேணும். அந்த அவசரத்திலயும் அவன் சீனியரை மறக்கலையடா.

இதே சீனியர்தான் இன்னொருமுறை தாங்கள் கேதீஸ்வரத்திலிருந்து வந்தபோது 'ரக்ரர்' காத்துப்போய்விட்டதென்றும் ஒருவகைக் காட்டுப்புல்லை ரயருக்குள் அடைந்து நிரப்பிவிட்டு ஓடி வந்தார்களென்றும் சொன்னார். அது பரவாயில்லை. வீட்டுக்குள் வந்து பார்த்தபோது, ரயருக்குள் புல்லு கோதுமை மாப்போல அரைபட்டுக்கிடந்ததாம். அதைத் தவிடு கரைப்பதுபோல தண்ணீரில் கரைத்து மாட்டுக்கு வைத்தபோது அது 2 லீற்றர் பால் அதிகம் கறந்தது என்று சொன்னதுதான் ஹைலைற்.


சீனியரைப் போன்றவர்கள், எதற்காக இக்கதைகளைப் புனைந்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இந்தச் சிறுசிறு கதைகளால்தான் நாட்கள் சுவாரசியமாக புதியதாக நகர்ந்தன. அந்த நாட்கள் இந்த நாளைப்போல் ஒரேமாதிரி இருக்கவில்லை.

94 - 95 காலம். தோதரன வயதிலிருந்தேன். முயல் வேட்டைக்கெனக் கிளம்புவோம். கையில் பொல்லுகள் சகிதம். இரண்டு மூன்று நாய்களோடு பத்துப் பதினைந்து பேரெனக் கிளம்பினால், கைப்புள்ள கிளம்பிட்டான், எத்தனை உசிர் போகப்போகுதோ என்ற கணக்காக ஊர் எங்களைப் பார்க்கும். பற்றைப் புதர்களுக்கு பொல்லால் எறிவதென்றும் முயல்கள் பாய்ந்து ஓடினால், நாய்கள் அவற்றைத் துரத்திப்பிடிக்கும் என்பதுதான் திட்டம். ஆனால் நான் அறிந்து முயல் ஒரு பொழுதும்அகப்பட்டதில்லை. வயலோரமாக ஏதாவது கோழியைத்தான் அமுக்குவார்கள் அண்ணமார். அங்கேயே கோழியை உரித்து வயலுக்குள்ளேயே மூன்று கல் அடுக்கி, அடுப்புச் மூட்டி சமைப்போம். ஆனந்தியப்பு கடையில் யாராவதுபோய்

(22 ஆம் பக்கம் பார்க்க)

'எலக்ஷனு'க்கு ரண்டு மூண்டு நாளுக்கு முதல், வீட்டு வசதிகள் சரியாக் கிடைக்காத கொஞ்ச சனத்துக்கு கூரைத் தகரங்களை அன்பளிப்பாகக் கொடுத்து, வீட்டுக்குப் போடுங்கோ என்று சொன்னவராம். சனமும், நீங்கள் தெய்வமய்யா என்று கும்பிட்டு வாங்கிக்கொண்டு போச்சினமாம். ஆனால் 'எலக்ஷனில' ஆள் தோத்திட்டார். கூரைத்தகடு வாங்கின ஆக்களின்ரை 'வோட்டு' விழுந்ததே சந்தேகமாம். ஆள் கொஞ்சம் கோபத்தோட போய், 'நீங்களெல்லாம் என்ன மனிசர். பல்லை இளிச்சு வாங்கிக் கொண்டுபோயிற்று கழுத்தை அறுத்திட்டியளே' என்று திட்டினாராம். சனம் ஒண்டும் விளங்காமல், 'ஐயா நீங்கதானே வீட்டுக்குப் போடச்சொன்னியள் என்று இழுத்திச்சினமாம்.'

# சிம்மசொப்பனம்-29



இந்த 80,000 பேரில் 20,000 பேர் மட்டுமே ஸ்பானிய இராணுவப் படை வீரர்கள். மற்றவர்கள் படை வீரர்களோடு இணைந்து க்யூபர்களை ஒடுக்க தாமாகவே முன் வந்தவர்கள். இவர்களின் எண்ணிக்கை 60,000 ஏற்கனவே நடந்து முடிந்த பத்தாண்டுப் போர் முயற்சியால் க்யூபர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பது பெருமளவில் கட்டுப் படுத்தப்பட்டிருந்தது. அதனால் ஆள் களைத் திரட்ட முடிந்த அளவுக்கு ஆயுதங்களைத் திரட்ட மார்த்தியால் இயலவில்லை. ஸ்பானியர்களிடமோ நவீன ஆயுதங்கள் கொட்டிக்கிடக்கின்றன. ஆள்பலமும் அதிகம். கையளவே உள்ள படைவீரர்களைக் கொண்டு அவர்களை எதிர்த்து நிற்பது எப்படி?

அப்போது உருவானது தான் கெரில்லாப் போர் முறை.மறைந்திருந்து தாக்குதல், எதிரியை அலைக்கழித்தல், அவர்களை சோர்வடையச் செய்தல், எதிரியின் ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொள்ளுதல் போன்ற செயல்திட்டங்களுடன் களத்தில் குதித்தார் மார்த்தி.

ஜூன் 11, 1895 முதல் நவம்பர் 30, 1897 வரையில் ஆயுதங்களைப் பெற கிட்டத்தட்ட 60முறை கெரில்லா வீரர்கள் முயன்றனர். 28 முறை இவர்கள் அமெரிக்க கருவூலத் துறையினரால் முறியடிக்கப்பட்டனர். கப்பற்படை ஐந்து முயற்சிகளை முறியடித்தது. நான்கு முறை ஸ்பானியர்கள் இவர்களை வெற்றி கொண்டனர். ஆயுதங்களைச் சுமந்து வந்த கப்பல்கள் இரண்டு முறை மூழ்கிப் போயின. மொத்தத்தில் 60 முயற்சிகளில் ஒன்றே ஒன்று மட்டும் வெற்றி பெற்றது. ஏப்ரல் 11, 1895-இல் தனது படையினருடன் க்யூபா வந்த மார்த்தியை ஸ்பானியர்களின் படை எதிர்கொண்டது.மே 19, 1895 அன்று மார்த்தி சுட்டுக் கொல்லப் பட்டார்.

போராட்டம் மார்த்தியோடு முடிந்து போக வில்லை. மாறாக மேலும் வலுத்தது. சர்க்கரை ஆலைகளில் பணி செய்யும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஸ்பெயினால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஆலைகள் இழுத்து மூடப்பட்டன. ஸ்பெயினை விட அதிகம் பாதிப்படைந்தது அமெரிக்கா தான். க்யூபாவில் முதலீடு செய்திருந்த அமெரிக்க முதலாளிகளின் நலன் க்யூபாவில் முதலீடு செய்திருந்த அமெரிக்க முதலாளிகளின் நலன், பாதிப் படைந்ததைக் கண்ட அமெரிக்கா விழித்துக் கொண்டது. ஸ்பெயினிடமிருந்து க்யூபாவை பிரித்து எடுத்து விடத் துடித்தது. பெப்ரவரி 1868 இல் "மைனோ" எனும் போர்க்கப்பலை க்யூபாவுக்கு அனுப்பி வைத்தது அமெரிக்கா.

(தொடரும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 680

**மேலிருந்து கீழ்**

1- கொடியவன்.
2 - கூரையின் உயர்ந்த பகுதி.
3 - மருந்துச் சரக்காக உபயோகிக்கப்படும் காய்.
4 - தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு இது அமுதசுரபி.
5 - இரட்டை நிலை.
6- பாய்.
8 - தன்து.
10- கடைக்குட்டி
12- வல்லமை மிக்கவன்.
13- பொன்னைச் சோதித்துப் பார்க்கும் செயற்பாடு.
14- கருமையான இருள்.
15- ஒரு கணக்கீட்டுக்குறி.
16- தங்களது.
18 - கழிந்து போன காலத்தை குறிப்பிடும் அடைமொழி.
20 - சாறுக்கும் திண்மத்துக்கும் இடைப்பட்ட ஒரு நிலை.

**இடமிருந்து வலம்**

1- கட்டு மீறிய காம இச்சையுடைவன்.
4- நெஞ்சுக்குப் பின்புறம்.
7- மெல்லிய உலோகப்படலம்.
8 - ஒருவனுக்கென எழுதப்பட்டது.
9 - பண்டைக்கால ஆண்கள் காதில் அணிந்த அணிகலன்.
11- ஒரு பறவையினம்.
12 - வேண்டுமென்றே ஒருவரைச் சீண்டுதல்.
14 - சன்னி.
16 - நில்/நிறுத்து.
17- எல்லாமும்.
19- மருமகன்.
21- வலுவுள்ள....
22- எம்புதல்.
23- எலும்பும், என்பதன் பொருள் தகும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| 9 | | | 10 | | | | |
| | | 11 | | | 12 | | 13 |
| | 14 | | | 15 | | | |
| 16 | | | 17 | | | 18 | |
| 19 | | 20 | | | 21 | | |
| 22 | | | | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:--------------------------------

விலாசம்:------------------------------------------

-------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சொ. சி.போட்டி இல 680

■ சொற்சிலம்பம் போட்டி 680ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 22 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, ஜீலை 29 மற்றும் ஆகஸ்ட் 05.ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 677இல் பரிசு பெற்றோர்

1 ஞா.தனுசியா, கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

2 எஸ்.பி.செல்வக், மே/பா.வே. இராசநாயகம், சோறன்பற்று, பளை.

3 இ.புலக்ஷன், கணவத்தை, அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக் கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ள லாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

செல்வி சிவநாதன் ரிஷானி, இல : - 12/11 ,2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

செ.தவலிங்கம், தசபவனம், சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

ஆ.பொ.திரவியநாதன், பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை.

அ.ஜெயசேகர, காளி கோவிலடி, துர்க்காபுரம், தெல்லிப்பளை.

க.கௌரிதேவி , வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை.

### சொற்சிலம்பப் போட்டி 678இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.திகைப்பு.
2.ருது.
3.பகலவன்.
4.திலகர்.
5.ஆம்
8.கணி.
9.பல்லவி.
10.சேய்.
12.தகரம்.
13.நோகும்.
15.நரம்பு.
16.புதன்.
17.பிதா.
18.புயல்.
20.சரி.

**இடமிருந்து வலம்**

1.திருப்பதி.
5.ஆணை.
6.கைது.
7.கலகம்.
9.பலகணி.
11.புதல்வர்.
13.நோய்.
14.கலன்.
15.நகு.
16.புரவி.
17.பிரம்பு.
19.தம்.
20.சதாம்.
21.வரி.
22.புலால்



# ராஜ கழுகு மீது காகம் சவாரி

**வா**னில் பறந்து கொண்டிருந்த ராஜ கழுகு மீது காகம் ஒன்று இறங்கிய காட்சி படம் பிடிக்கப்பட்டு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிகழ்வு வோஷிங்டன் கடல் மீது பறந்து கொண்டிருந்த போது நடந்து உள்ளது. இதனை அமெச்சூர் புகைப்பட கலைஞர் பூ சான் படம் பிடித்து உள்ளார்.

ஒரு ராஜ கழுகு ஒன்று தனது இரையை தேடி வோஷிங்டன் கடல் பகுதி மேல் பறந்து கொண்டிருந்தது. அப்போது ஒரு காகம் பறந்து கொண்டிருந்த கழுகின் மீது இறங்குவதற்கு முயற்சி செய்து இறங்கியும் நின்றது. இந்த நிகழ்வுக்கு சிறிது நேரத்திற்கு பிறகு இரண்டு பறவைகளும் வெவ்வேறு திசைகளில் பறந்து செல்கின்றன. இந்த அபூர்வ காட்சி அமெச்சூர் புகைப்பட கலைஞர் பூ சான் (வயது 50) படம் பிடித்து உள்ளார்.

இது குறித்து பூசான் கூறியதாவது:-

ஒரு இரைதேடும் கழுகை படம் பிடிக்க புகைப்படக் கருவி வழியாகப் பார்த்து கொண்டிருந்தேன். அப்போது காகம் ஒன்று கழுகின் பின்புறம் பறந்து வந்தது. நான் முதலில் காகம் கழுகை முந்தி பறந்து விடும் எனத்தான் எண்ணினேன். ஆனால் நடந்ததோ ஆச்சரியப்படும் சம்பவம். ஆனால் அந்தக் காகம் தரையில் இறங்குவது போல கழுகின் மேல் பகுதியில் போய் இறங்கியது. ஒரு குறுகிய நேரத்தில் காகம் ஒரு சிறிய இலவசச் சவாரி செய்தது பார்க்க ஆச்சரியமாக இருந்தது. இந்த எதிர்பாராத சம்பவத்தால் கழுகிடம் எந்த மாற்றமும் இல்லை. சில நொடிகளில் இரண்டு பறவைகளும் வெவ்வேறு திசைகளில் பறந்து சென்றன என்றார்.

# மூளையில் சத்திரசிகிச்சை - கிற்றார் வாசித்த நோயாளி

பிரேசில் நாட்டைச் சேர்ந்த வங்கி ஊழியரான அந்தோணி குல்காம்ப் டியாஸ் (33) என்பவருக்கு ஏற்பட்ட புற்றுநோய்க்கட்டியை அகற்ற கடந்த வாரம் மூளைப் பகுதியில் ஒரு சிறிய சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

20 ஆண்டுகளாக கிற்றார் வாசித்துவரும் இவருக்கு நடத்தப்பட்ட இந்தச் சத்திரசிகிச்சையின் போது முழுமையாக மயக்க மருந்து அளிக்காமல், வலியை மட்டும் மரத்துப் போகச் செய்யும் மருந்துகளைச் செலுத்தி, சத்திரசிகிச்சையின்போது அவரது மூளையின் செயல்பாடுகளை நவீன கருவிகளின் மூலம் கண்காணிக்க வைத்தியர்கள் முடிவு செய்தனர்.

இதை அந்தோணியிடம் அவர்கள் தெரிவித்தபோது, இதற்கு முழுமனதுடன் சம்மதித்த அவர், சத்திரசிகிச்சையின்போது கிற்றார் வாசிக்கத் தனக்கு அனுமதி அளிக்க வேண்டும் என வேண்டுகோள் வைத்தார். வைத்தியர்களும் அதற்கு சம்மதம் தெரிவித்தனர். அன்று அந்த சத்திரசிகிச்சைகூடம் கிற்றார் இசைக் கச்சேரி மேடையாக மாறியது.

சத்திரசிகிச்சைக் கூடத்தில் உள்ள கட்டிலில் படுத்தபடியே, வைத்தியர்கள் மண்டை ஓட்டை அகற்றி மூளையை ஆராய்ந்து, கட்டியை அகற்றிக் கொண்டிருக்க.., பிரபல மேற்கத்திய இசைக்குழுவான 'பீடில்ஸ்' குழுவினர் வாசித்த ஆறு சூப்பர் ஹிட் பாடல்களையும், தனது மகனுக்காக இசையமைத்த தாலாட்டு பாடலையும் இசைத்து, வைத்தியர்களைப் பரவசத்தில் ஆழ்த்தினார் அந்தோணி.





# பாதி பாம்பாகவும் பாதி மனித உடலும் உள்ள சிறுமி

**ஆ**ள் பாதை ஆடை பாதி என்று சொல்வோம். இங்கே பாம்பு பாதி - சிறுமி பாதி என்று சொல்லும் அளவுக்கு ஒரு சிறுமியைப்பற்றிய அபூர்வ தகவல் இது.

தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்காக்கில் மார்பு பகுதிக்கு மேலே பெண்ணாகவும், கீழ் பகுதி பாம்பாகவும் தோற்றமளிக்கும் விசித்திர சிறுமியை காண நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையில் காத்திருக்கும் செய்தி ஆசிய ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

தற்போது 8 வயது சிறுமியாக இருக்கும் மய் லி ஃபே என்ற அந்த சிறுமி பிறந்த போதே அவளது உடலின் கீழ் பகுதி பாம்பின் தோற்றத்துடனும், தலை முதல் மார்பு வரையிலான பகுதி மனித தோற்றத்துடனும் இருந்ததாக அவளது பெற்றோர் கூறுகின்றனர்.

பாம்புப் பெண்ணான மய் லி ஃபே-வை தரிசிக்கவும், அவளது உடலைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொள்ளவும் இந்து, புத்த மதத்தினர், உள்ளூர் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் அதிகாலை முதல் நள்ளிரவு வரை நீண்ட வரிசையில் கால்கடுக்க காத்துக்கிடக்கின்றனராம்.

அவர்கள் வழங்கும் காணிக்கைப் பணத்தின் மூலம் அந்த பெண்ணின் குடும்ப வருமானமும், வாழ்க்கை தரமும் குறுகிய காலத்துக்குள்ளாகவே அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது. இருப்பினும், அவர்களின் நிம்மதியும், தனிமையும் தொலைந்துப் போனதாக மய் லி ஃபே-வின் நெருங்கிய உறவினர் ஒருவர் பேட்டியளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

என்னே வேடிக்கையான உலகமிது?

## நயன்தாரா சம்பளம்

ராஜா ராணி வெற்றியைத் தவிர நயன்தாராவுக்கும் அடி மேல் அடிதான். இது கதிர்வேலன் காதல் தொடங்கி வரிசையாக நீள்கிறது. இதனால் தயாரிப்பாளர்கள் சம்பள விஷயத்தில் சற்றுத் தயங்கி நின்றாலும், நயன்தாராதான் வேண்டும் என்பதால் , தன் மதிப்பை கொஞ்சமும் இழக்காமல், கேட்கிற சம்பளம் இருந்தா வரலாம், இல்லை என்றால் வேறு நடிகையைப் பார்த்துப் போங்கள் என்கிறாராம் நயன்தாரா.

## கவர்ச்சி வில்லி

கவர்ச்சியான நாயகிகள் வில்லியாக நடித்தாலே ரசி கர்களுக்குக் குதூகலம் தான். பாலகிருஷ்ணா நடிக்கும் ஒரு தெலுங்குப் படத்தில் வில்லியாக நடிக்க அஞ்சலிக்கு அழைப்பு வந்திருக்கிறது. வில்லியாக இருந்து கில்லியா கவர்ச்சி காட்ட முடிவெடுத்துள்ளாராம் அஞ்சலி.



## காத்திருக்கும் இந்தியா

ராஜமௌலி க்காக இந்தியாவே காத்திருக்கிறது.பாகுபலி படத்தின் செலவு மிகவும் அதிகமாம். அதனால் படத்தின் வெளியீட்டு உரிமைகளை இதுவரை காணாத அளவுக்கு அதிகத் தொகைக்கு விற்பனை செய்துள்ளார்கள். இதனால் இதுவரையிலான அனைத்து இந்திய சாதனை களையும் முறியடித்து விடும் என்கிறார்கள். படம் வெற்றியாக வேண்டும் என்றால் 200 கோடிகளை வசூல் செய்ய வேண்டுமாம்.



## விஜய்க்கு வில்லனாக மகேந்திரன்.

விஜய்க்கு வில்லனாக நடிக்கிறார் இயக்குநர் மகேந்திரன்.

அட்லி இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு ஜூலை தொடங்கிவிட்டது. முதலில் ஒரு பாடல்காட்சியைப் படமாக்கிக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தப்படத்தில் இயக்குநர் மகேந்திரன் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

படத்தில் விஜய்க்கு இணையாக அவருடைய பாத்திரப்படைப்பு இருக்குமென்று சொல்லப்படுகிறது.

மகேந்திரன், இயக்கும்போது நடிகர்களுக்கு நன்றாக நடிப்புச் சொல்லித்தருவார். அதைப் பற்றிக் கேள்விப்பட்டுத்தான் இந்தவேடத்துக்கு மகேந்திரன் பொருத்தமாக இருப்பார் என்று இயக்குநர் அட்லி தேர்வு செய்ததாகவும் சொல்லப்படுகிறது.

அப்படி என்ன வேடம்? படத்தில் அவர்தான் வில்லன் என்கிறார்கள். விஜய் போன்ற ஒரு சக்திமிக்க நாயகனுக்கு வில்லன் என்று வரும்போது அதுவும் பேசப்படும் வேடமாகத்தான் இருக்கும், இந்தப்படத்தில் மகேந்திரன் நடிப்பதன் மூலம் படம் வெளியானதும் அந்தவேடம் மிகவும் பரபரப்பாகப் பேசப்படும் என்று சொல்கிறார்கள்.

இந்தப்படம் ஏற்கனவே தமிழில் வந்த ஒருபடத்தைத் தழுவி எடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்தப்படத்திலும் மலையாளநடிகர் ஒருவர் வில்லன் வேடத்தில் நடித்திருந்தார். அந்தப்படம் வெளியானபோதும் அந்தப்பட நாயகனைவிட வில்லன்வேடம் பற்றி அதிகமாகப் பேச்சு இருந்தது. இந்தப்படத்திலும் அதுபோலவே நடக்கலாம் என்றும் பேச்சு இருக்கிறது.



## பாராட்டு மழை

பெங்களூருக்கு டேஸ் ஒரு நடிகை தன்
நடிக்கும் சக நடிகைகளிடம் சண்டை
இருப்பதே பெரிய விஷயம். ஆனால்
தன்னுடன் நடிக்கும் எந்த நடிகையாக
உடனே நட்பாகி அவரது நடிப்பு குறி
குறித்தும் பாராட்டி தள்ளிவிடுகிறார்.
இதனாலேயே மிகவும் நட்புடன் உள்
சமந்தா என அவர் நடிக்கும் படப்பிடி
கள் பாராட்டத் தொடங்கி விட்டனர்.





## கவர்ச்சியான உடை

இந்த வார சமூக வலைத்தளத்தில் ரசிகர்களால் திட்டித் தீர்க்கப்பட்ட நடிகை ஸ்ருதிஹாசன். 62ஆவது பிலிம்பேர் விருது விழாவில் வேட்டி, சட்டை அணிந்து வந்திருந்தார் கமல்ஹாசன். ஆனால் மகளோ, மிகவும் கவர்ச்சியான உடை அணிந்து வந்திருந்தார். நெட்டிசன்கள் கொந்தளிக்க, வைரல் கலாட்டாக்கள் மினுமினுங்கின.

## பயணங்கள் முடியாது

லீ, லாடம் படங்கள் தோல்வி அடைந்ததால் நிச்சய வெற்றி பெற வேண்டும் என்ற வெறியில் இருந்தார் பிரபு சாலமன். டெல்லியிலிருந்து சென்னைக்குப் பயணப்படும் இளைஞன் ஒருவனின் காதல்தான் அந்தக் கதை. ஆனால் அந்தச் சமயத்தில் லிங்குசாமி இயக்கத்தில் வெளியாகி மிகவும் வெற்றியடைந்த பையா படத்தின் கதை அப்படியே இந்தக் கதையைப் போலிருந்ததால் அந்த கதை வசனத்தை பரணில் போட்டுவிட்டு, மைனா வெற்றியைக் கொடுத்தார். தற்போது அந்தப் பயணக் கதையைத்தான் தனுஷை வைத்து இயக்குகிறாராம் பிரபு சாலமன்.



## ... மழை

...ரு நடிகை தன்னுடன் ...ரிடம் சண்டை போடாமல் ...யாம். ஆனால் சமந்தாவோ ...ந்த நடிகையாக இருப்பினும் ...து நடிப்பு குறித்தும், குணம் ...ளிவிடுகிறார். ...கட்புடன் உள்ள நடிகை ...க்கும் படப்பிடிப்பு வட்டாரங் ...கி விட்டனர்.



## நிழல் நிஜமாகிறது

பெங்களூருக்கு டேஸ் படத்தில் பெங்களூரில் செட்டில் ஆக வேண்டும் என்ற கனவுடன் இருப்பார் நஸ்ரியா. அதைப் போலவே நிஜ வாழ்விலும் அவருக்கு பெங்களூரில் குடியேறத்தான் மிகவும் ஆசையாம். அதை தனது காதல் கணவரிடம் தெரிவிக்க அவரும் டபுள் ஒகே சொல்ல, தற்போது பெங்களூரில் ஒரு பங்களா ரெடியாகி வருகிறதாம் ஃபகத் பாசில் - நஸ்ரியா தம்பதிக்கு. கூடவே இருந்து வீடு கட்டுவதைக் கவனித்து வருகிறாராம் நஸ்ரியா.



## வாய்ப்புக்களைத் தவிர்த்தார்

ஹிந்தி, தெலுங்கு என பல படங்களில் நடித்துவரும் ராதிகா அப்சயா மீபகாலமாக தெலுங்கு படங்களில் நடிப்பதை தவிர்த்து வருகிறார். தெலுங்கு சினிமா நடிகர்கள் , மற்றும் பட அதிபர்கள் சிலர் நல்லவர்களாக இல்லை. அங்கிருக்கும் பல நடிகர்கள், இயக்குநர்கள் பெண்களை மதிப்பதே இல்லை. ஆணாதிக்கம் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். எனக்கு அது பிடிக்கவில்லை. எனவே தான் தெலுங்கு சினிமா வாய்ப்புகளை தவிர்த்து வருகிறேன்






இந்த இரு படங்களுக்கு இடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்.



## காகம் ஒன்று காட்டிலே...

காகம் ஒன்று காட்டிலே,
தாகத்தாலே தவித்தது.
வீட்டின் பக்கம் வந்தது.
குடம் ஒன்றைக் கண்டது
அந்தக் குடத்தின் அடியிலே,
கொஞ்சம் தண்ணீர் இருந்தது.
கல்லைப் பொறுக்கிப் போடவே,
தண்ணீர் மேலே வந்தது.
ஆசை தீரக் குடித்தது.
தாகம் தீர்ந்த காகமும்,
வேகமாகப் பறந்தது.




## குயில்

குயில் அழகாகப் பாடும் பறவை இனத்தைச் சேர்ந்தது. மற்ற பறவைகளைப் போல குயிலுக்கு கூடு கட்டத் தெரியாது. அது இனப் பெருக்கம் செய்ய வேண்டிய நாள்களில் பெரும்பாலும் ஒரு காகத்தின் கூட்டினைத் தேடிச் சென்று அக்கூட்டிலிருந்து ஆண் குயில் ஒரு முட்டையினைத் திருடிச் செல்லும். காகம் ஆண் பறவையினைத் துரத்திச் செல்லும் போது பெண் குயில் காகத்தின் கூட்டில் தன் முட்டையினை இட்டுவிடும். சில சமயம் காகத்தின் கூடு கிடைக்காத போது சிறு பறவைகளின் கூடு கிடைத்தால் அதில் கூட முட்டை இட்டு விடும். இதனை அறியாத காகம் குயிலின் முட்டையையும் சேர்த்து அடைகாத்துப் பின் குஞ்சுகள் வெளி வந்ததும் குயிலின் குஞ்சுக்கும் சேர்த்து இரை கொடுக்கும். குயிலின் குஞ்சு குறிப்பிட்ட சில நாள்கள் அப்பறவைகளின் கூட்டில் இருந்தே உணவு உண்ணும். அப்பொதெல்லாம் குயில் குஞ்சு காகத்தின் குஞ்சுபோலவே கட்டைக் குரலிலொலி எழுப்பும். கொஞ்சம் கொஞ்சமாக அதன் குரல் தேறி குயிலின் குரலைப் பெற்று விடும். குயில்களில் பல வகை உண்டு.

01. குயில்
02. அக்கூ குயில்
03. கொண்டைக் குயில்
04. வேட்டையாடும் குயில்






## வர்ணம் தீட்டலாம் வாங்க

## நன்றியுள்ள காக்கை

மேகலாவுக்கும் சரவணனுக்கும் அர்ச்சனா என்ற 2 வயத
மகள் இருந்தாள். அரச்சனாவுக்கு வீட்டின் முற்றத்தில் வைத்து சோற
ஓடினார் அவளின் அம்மாமுற்றத்தில் சோறு ஊட்டுவதை மரத்தி
நின்று பார்த்த ஏராளமான காகங்கள் கூடிவிட்டன.
காக்காவைக் காட்டிக் கொண்டே மகளுக்கு சோறு ஊட்டுவாள் மேகலா
ஆனால் காக்காவுக்கு சோறு போடுவதில்லை. அப்போது அடுப்பி
விசில்... சத்தம் கேட்கவே, அர்ச்சனாவை கிழே இறக்கிவிட்டு
வீட்டிற்குள் ஓடினாள் மேகலா.
அர்ச்சனாவின் தளிர்நடையால் அவள் நடக்கும் அழகோ தனி தான்
அம்மா உள்ளே போனதும், அர்ச்சனா கண்ணால் சிரித்தபடி தளிர்நடை
நடந்தபடி. சோற்றை அள்ளி காக்காவை நோக்கி நீட்டினாள். காகங்க
அவளை நெருங்கி வர, காக்கா இந்த... காக்கா இந்தா... என்று சோற
போட்டாள்.
உள்ளே சென்ற மேகலா திரும்பி வர, அர்ச்சனாவை திட்டி விட்டு.
அரிசி விக்கிற விலைக்கு இதுகளுக்கு வேற சோறு போடணுமாக்கும்
உன் சாப்பாட்டை காக்காவுக்கு தியானம் பண்றியா? காக்கைகளை
விரட்டினாள்
அர்ச்சனாவுக்கு நாய், பூனை, காக்கா, எறும்பு எல்லோருமே
நண்பர்கள்தான். கையில் என்ன பண்டம் வைத்திருந்தாலும் போட்
விடுவாள். அவளுக்கு என்ன தெரியும்...!?
அதட்டிக் கொண்டே சோறூட்டிய மேகலா, விளையாட்டு
சாமான்களை அர்சனாவிடம் கொடுத்துவிட்டு, வீட்டு வேலைகளை
கவனிக்க வீட்டுற்குள் சென்றுவிட்டாள்.
அர்ச்சனா முற்றத்தில் விளையாட்டு சாமான்களை பரப்பி விளையாடி
கொண்டிருந்தாள். திடீரென அர்ச்சனாவின் கூச்சலும், காக்காக்க
கத்தும் சத்தமும் கேட்டு வெளியே ஓடி வந்தாள் மேகலா.
அங்கே குரங்கு ஒன்றைக் காக்கைக் கூட்டம் விரட்டி விரட்டி கொத்தி
கொண்டு இருந்தது.
அம்மா என் டப்பா... என்று அழுத அர்ச்சனா, அம்மாவை கட்டி
கொண்டாள்.
ஒரு நொடியில் நடந்ததை புரிந்து கொண்டாள் மேகலா.
தன் மகள் விளையாடிய பாத்திரத்தில் சாப்பிட ஏதேனும் இருக்குமோ
என எண்ணி குரங்கு பாத்திரத்தை தூக்கிக் கொண்டு ஓடியிருக்கிறது
இதைப் பார்த்த காகங்கள் குரங்கினை விரட்டி கொத்துகின்றன
என்பதைப் புரிந்து கொண்டாள்.
மகள் மற்ற ஜீவன்களுடன் நட்பாக இருந்தது, அவளுக்கு ஒரு
இடையூறு நேர்ந்தபோது உதவியாக அமைந்ததை எண்ண
ஆச்சிரியப்பட்டாள் மேகலா.
அன்று முதல் மகளுக்கு சோறூட்ட வரும் மேகலா முதலில்
காகங்களை க்கா...க்கா... எனக் கூப்பிட்டு சாதம் வைத்த பின்னரே
மகளுக்கு உணவூட்டினாள்!
நாய் மட்டுமல்ல நாம் பாசம் காட்டும் எல்லா உயிரினங்களும்
நன்றியுள்ளவையே.
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.
என்கின்ற குறள் ஞாபகம் வருகிறது
குறள் விளக்கம்: கிடைத்ததைப் பகுந்து கொடுத்துத் தானும் உண்டு
பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள்
எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

# செயற்கைப் போர்




செயற்கைப் போரும்
இயற்கை அழிவும்
நாட்டில் தாண்டவமாட
போரின் பிடியிலும்
மண்ணின் சரிவிலும்
மக்கள் பலர் சாய
மாண்டு போன தம்
பெற்றோர்களைப்
பிஞ்சுகள் தேட
அநாதைப் பிள்ளைகள்
இவர்கள் என்ற
பட்டமும் சூட
நீ தத்தெடுக்க நான் தத்தெடுக்க
என்று அரசியல் பாட
ஓடி வந்தனர்
ஓலம் இட்டனர்
பல நிலையாக-இனி
வாடிய அந்தப்
பிள்ளைகளுக்காக
நீங்கள் எதைச் செய்தாலும்-அது
பாறி விழுந்து விட்ட
பட்ட மரத்தில்
பொன் ஊஞ்சல் கட்டி விட்டு
ஆடலாம் வா
என அழைப்பதற்கு
சமமாகும்
யார் என்ன கொடுத்தாலும்
இழந்த தாய் தந்தைக்கு ஈடாகுமா?

பா. தீபா,
முத்தையனூர்.

# ஆறுபடை வீடு

முல்லை மாயவதாசன்.

ஆறுபடை வீடுடைய வேல் முருகா
மாறுபட சூரனை வதைத்தவனே
சேறு படிந்த நம் வாழ்வை
செழிப்பாக்க அன்று
வீறு கொண்டு போராடி
விதையானோர் திருநாளில்
ஆறுமணிப் பூசை மணி
அடங்கியதேன்?
ஐயரும் வீட்டுக்குள் முடங்கியதேன்?
ஏறுமயில் ஏறி வந்து தீமைகளைக்
காப்பவனே
கூறுமையா இந்தக் கொடுமைக்கு
காரணம் என்ன
கோவணத்துடன் பழனிக் கோவில்
கொண்டவனே- எம்மையும்
கோவணத்துடன் உன்னடி சேர்க்க
ஆசை கொண்டாயா?



# கல்லாகவே இருப்போம்



எப்போ
எமக்கான
சாப விமோசனம்
புரியவில்லை
அகலிகையின்
கல்மனமாக
எம் மனங்கள் இனி
யார் தருவார்
எமக்கான சாப விமோசனத்தை
கல்லாகவே இருப்போம்
யாரும் ஏறி
மிதித்துச் செல்லும்
கல்லாகவே இருப்போம்
கல் தோன்றி மண் தோன்றாக்
காலத்து முன் தோன்றியவர்
நாமன்றோ
இனிக் கல்லாகவே
இருப்போம்

வேல்நந்தன்,
புலோலியூர்.

# கவிதைப்புனல்

# சிதையும் உள்ளத்திலே

விடிகாலை எழுந்தால்
வீடுகளில் தெய்வீகக் கானம்
என் வீட்டில் வேலையில்லாத
புராண படலம்

தாடி, மீசை கண்டு
தலை கூட நரைத்திட்டு
வேலைக்காக காலம்
தள்ளித் தள்ளி நகர்கிறது

மரம் வளர்வதாயின்
முறையான உரம் வேண்டும்
வளமொன்று இல்லாமல்
கல்வியில் உயர முடியாது

ஏட்டிக்குப் போட்டியாக
பேசிட முடியும்
எரிப்பதற்கு அவர்கள்
எரிவது நானல்லவோ?

பிடிக்கும் வேலையை
செய்து கொண்டால்
தரக்குறைவென்று
அம்மனின் நச்சரிப்பு

கிடைக்கும் வேலையை
முயன்று கொண்டால்
முட்டாளோ நீயென்று
எட்டாத கேள்வி

பேனைகள் கூட
சில வேளை அழுகின்றன
நிம்மதி இல்லாமையால்
உள்ளம் பாழ்பட்டு
அழுகிறது.

பிழைக்க முடியாத
நிலை கூட புரிகிறது
பெற்றோரின் அதிகாரம்
பல வீடுகளில்
பிள்ளையுள்ளங்களை
சிதைக்கிறது



வே.வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.

# உங்கள் பிள்ளைகள் மேல் கண் வையுங்கள்!

பிரபல நடிகைகள் என்றால் அவர்கள் எப்போதும் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வோராகத் தான் இருக்கின்றார்கள். திரிஷா, மனிஷா கொய்ராலா, ரீமாசென் எனப் பல நடிகைகளைத் தொடர்ந்து அண்மையில் பரபரப்பை ஏற்படுத்தும் சீடி விவகாரத்தில் மாட்டியிருப்பவர் தான் பூஜா. நடிகைகளைக் கனவுக் கன்னிகளாகவும், தமக்கு நெருங்கியவர்களாகவும் கருதி வாழும் தமிழ் உலகம், நடிகைகளின் படங்கள் கிடைத்தால் அல்லது நடிகைகளைப் பற்றிய அந்தரங்க சீடிக்கள் கிடைத்தால் சும்மாவா இருக்கப் போகின்றது?

நடிகை பூஜா தொழிலதிபருடன் அந்தரங்க உறவில் ஈடுபடுவது போன்ற வீடியோ கிளிப்ஸ் தான் அண்மையில் தமிழகத்தில் பரபரபாகப் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அட நம்மளைக் கூட மச்சி இப்படி ஒரு படம் பார்த்தியா? உன் கிட்ட பூஜாவின் அந்த சீடி இருக்கா என்று கேட்டுத் தொல்லை செய்கிறார்கள் என் பேஸ்புக்கில் உள்ள நண்பர்கள். கிராபிக்ஸ் இல்லாத உண்மையான வீடியோ இது என்று தமிழக காவல் துறையினர் உறுதி செய்திருக்கின்றார்கள். தற்போது இணையம் மூலமாகவும் சரி, அல்லது ஏனைய சோஷியல் வலைப் பின்னல்கள் மூலமாகவும் சரி பூஜாவின் இந்தச் சீடியினைப் பார்க்க வேண்டும் அல்லது பூஜா பற்றிய முகச் சாயல் கொண்ட பெண்ணை அறிய வேண்டும் எனும் ஆவலில் தான் எம் தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியினர் இருக்கின்றார்கள்.

உண்மையில் உலக நாடுகளோடு ஒப்பிடும் போது இணையத்தில் அதிகளவாக வெளிவரும் REALITY SEX SCANDAL வீடியோக்களில் இந்திய- இலங்கை நாடுகளைச் சேர்ந்தவர்கள் தான் முதன்மை பெறுகின்றார்கள். இந்திய இலங்கைப் பகுதிகளில் தான் பூங்காக்களிலும், பஸ்களிலும், ஏனைய விடுதிகளிலும் இடம் பெறும் உறவுகளைத் திருட்டுத் தனமாகப் படம் பிடித்து இணையத்தில் ஏற்றிக் காசு பார்க்கும் வேலை முனைப்புடன் இடம் பெற்று வருகின்றது. தேடு தளங்களிலும் SCANDAL வீடியோக்கள் எனத் தேடிப் பார்க்கும் போது, நமக்கு கிடைப்பதெல் லாம் இலங்கை இந்திய அப்பாவி இளம் சமூகத்தினது வீடியோக்கள் தான்.



நாம் எங்கே போகின்றோம்? ஆசிய நாட்டவர்களில் இலங்கை – இந்திய மக்கள் தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தினைச் சமயோசிதமாகப் பயன்படுத்துவதில் வல்லவர்கள் என்பதனை பஸ்களிலும், கடைகளிலும், ஹோட்டல்களிலும் , பெண்கள் டாய்லெட் இருக்கப் போகும் இடங்களிலும் திருட்டுத் தனமாகக் கமெராவினைச் செருகி அதன் மூலம் பிறரின் அந்தரங்கங்களை அறிந்து படம் பிடித்து இணையத்தில் ஏற்றித் தமது வக்கிரத்தினைத் தீர்த்துக் கொள்கின்றார்கள் சில குறுகிய மனப் பாங்கு கொண்டோர்.

இன்றைய கால கட்டத்தில் எம் சமூகத்தில் நிகழும் வேண்டத்தகாத சிறு வயதுக் கருத் தரிப்பிற்கும், பல துர் நடத்தைகளுக்கும் பேஸ்புக், மற்றும் இதர சமூக 'சட்டிங்' வலைத் தளங்களே காரணமாக அமைந்து கொள்கின்றன. உதாரணமாக இள வயதினர் அதிகளவாகத் தம் நேரத்தினை இச் சமூக வலைத் தளங்களில் செலவிடுவதன் மூலம் பல காமுகர்களின் ஆசை வார்த்தைகளுக்கு நம்பி அவர்களுடன் நெருக்கமாகி, பின்னர் நேரடிச் சந்திப்புக்களில் ஈடுபட்டுத் தமது வாழ்க்கையினைக் குட்டிச் சுவராக்குகிறார்கள்.

பேஸ்புக்கில் தம் படங்களைப் போட்டு, அதற்கு ஆடவர்கள் விமர்சனம் போட வேண்டும் என்பதற்காக, ஆபாசமாக, படு தூக்கல் கவர்ச்சியாக தம் அங்கங்கள் வெளியே துருத்திக் கொண்டு நிற்கும் வண்ணம் படங்களை எடுத்துப் பகிருவதிலும் இன்றைய இளம் சமுதாயத்தில் ஒரு பகுதியினர் முனைப்புடன் செயற்படுகின்றார்கள்.



ஆண்களில் சிலர் தாம் காதலித்த பெண்ணுடன் மனக் கசப்பு உருவாகியதும் அப் பெண்ணை விட்டுப் பிரியும் சமயத்தில்; பேஸ்புக்கில் அவளது பெயரிலே ஒரு ஆபாசமான அக்கவுண்டினைத் திறந்து அதனூடாக, தாம் நெருக்கமாக இருந்த தருணங்களில் எடுத்த படங்களைப் போட்டுத் தம் வக்கிர மனப் பான்மையினைத் தீர்த்துக் கொள்கின்றார்கள்.

இன்றைய கால கட்டத்தில் குழந்தைகள் வளர்ந்து வரும் பருவத்திலே பாலியல் தொடர்பான விழிப்புணர்வு, ஆண் பெண் உறவு தொடர்பான விளக்கங்கள், பாதுகாப்பற்ற உடலுறவு மூலம் ஏற்படும் கருத்தரிப்பு தொடர்பான ஆலோசனைகளைத் தம் பிள்ளைகளுக்கு கூற வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோர்களின் கையில் திணிக்கப்பட்டிருக்கின்றது. ஆணுறை பற்றிய விழிப்புணர்வுத் தகவல்களும் குழந்தைகள் பருவய வயதினை(டீன் ஏஜ்) எட்டுகின்ற பொழுதுகளில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டால் தான் எம் சமூகத்தில் நிகழும் இள வயதுக் கர்ப்பங்களைத் தடுத்து நிறுத்த முடியும்!

பெற்றோர்களே! எம் சமூகம் இணைய வழியில் துஷ் பிரயோகமாகுவதையா நீங்கள் விரும்புகின்றீர்கள்? உங்கள் பிள்ளைகள் பருவ வயதினை எட்டுகின்ற சமயத்தில், பெற்றோராகிய நீங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தினை வளமாக்க விரும்பும் சமயத்தில் நிச்சயமாக உங்கள் பிள்ளைகளுக்கும் பாலியல் பற்றிய தெளிவினை எடுத்துரைக்க வேண்டிய கடப்பாடு உங்கள் கண் முன்னே இருப்பதனை நீங்கள் மறந்து விடக் கூடாது.

இணைய வழியில் உங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும், அவர்களை நல்வழிப்படுத்துவதற்கும் ஏதுவான சில தகவல்கள்:

உங்கள் பிள்ளை வளர்ந்து வரும் சமயத்தில் தனியான கணினியினைப் பயன்படுத்தக் கொடுக்க வேண்டாம். நீங்களும் உங்கள் பிள்ளைகளும் பாவிக்கக் கூடிய பொதுவான கணினியை வீட்டில் வைத்திருக்கவும்.

கணியினை வரவேற்பறையிலோ அல்லது வீட்டில் உள்ள பெற்றோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதியிலோ வைத்திருங்கள்.

உங்கள் பிள்ளைகள் கணினி முன் உட்காருவதற்கான நேரத்தினை நீங்களே திட்டமிடுங்கள். அதிகளவான நேரத்தினை உங்கள் பிள்ளைகள் கணினி முன் செலவளிக்க விட வேண்டாம்.

பாலியல் தளங்களை, 'சட்டிங்' தளங்களை உங்கள் பிள்ளைகள் வீடுகளில் பார்க்க முடியாதவாறு மென்பொருளை (சொப்ட்வேர்களை) போட்டு வைத்திருக்கலாம்.


இதன் நோக்கம் பாலியல் தொடர்பான தமிழனின் உணர்வுகளை முடக்குவது அல்ல. ஆனால் சிறு பிள்ளைகள் மனதில் ஏற்படும் பாலியல் தொடர்பான துஷ்பிரயோகச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதேயாகும்.

தலைப்பினைப் பார்த்துப் பல பேர் ஓடிவந்திருப்பாங்க இல்லே. அது தான் தமிழன்!

தமிழ்கீற்று

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

# பழங்களும் நோய்களும்



வாயைக் கட்டிக் கிடக்கிறாளே. ரம்புட்டான் ரம்புட்டானாகத் திண்டு தீத்தாள். இப்ப காய்ச்சல் எண்டு அனுங்கிக் கொண்டிருக் கிறாள். திட்டித் தீர்த்தார் தந்தை. வேலைக்குப் போகாமல் பிள்ளையை மருத்துவமனைக்குக் கூட்டித் திரிய வேண்டிக் கிடக்கிறதே என்ற சினமாக இருக்கலாம்.

இவர் மட்டுமல்ல, இன்னமும் பலர் தங்கள் பிள்ளைகள் ரம்புட்டான் பழம் சாப்பிட்டதால்தான் கா...ச்சல் வந்தது என அவர்களில் என்று குற்றம் கண்டார்கள்.

மே, ஜீன் ஜீலை மாதங்கள் பொதுவாக ரம்புட்டான் சீசனாக இருக்கும். மல்வான ரம்புட்டான் மிகவும் பிரசித்தமானது. களனிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்திலிலேயே பெருமளவு ரம்புட்டான் உற்பத்தியாகின்றது.

இருந்தாலும் பிபில, மொனரா ஹல பகுதியிலிருந்து தை மாசி ...சங்களில் குறைந்தளவு ரம்புட்டான் பழங்கள் வருவதுண்டு.

**ரம்புட்டானுக்கு காய்ச்சலா?**

சீசன் காலத்தில் வீதி ஓரங்கள் எல்லாம் தற்காலிக கடைகள், லொறிகள். இவற்றில் எல்லாம் மதாளித்த சிவத்த கம்பளிப் பூச்சிகள் போலப் பழங்கள் குவி! து கிடக்கும். வழமையான பழக்கடைகளிலும் கூடை நிறை ப வைத்திருப்பார்கள். பிள்ளைகள் மட்டுமல்ல பெரியவர்களும் ரம்புட்டானை உண்பத்தில் பின்நிற்பதில்லை. இவ்வாறு ரம்புட்டான் சாப்பிட்டவர்களில் சிலர் காய்ச்சலுடன் வருகிறார்க . '...புட்டான் காய்ச்சல்' என்று தாங்களாகவே நாமம் சூட்டிவிடுகிறார்கள்.

அதேவேளை ரம்புட்டான் சாப்பிடாத பலரும் இப் பருவ காலத்தில் காய்ச்சலுடன் வருகிறார்கள்.

காய்ச்சல் என்பது தனி ஒரு நோயல்ல என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். தடிமன் காய்ச்சல், டெங்குக் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல், தைபொயிட் காய்ச்சல் எனப் பலவகை இருக்கின்றன. இவை யாவம் கிருமிகள் தொற்றுவதாலேயே வருகிறன.

ரம்புட்டான் சாப்பிடுவதால் எவ்வித காய்ச்சலும் வருவதில்லை. ஆனால் இது பரவலாகக் கிடைக்கும் காலங்களான ஜூன் ஜீலை மாதங்களில் பெரும்பாலும் தென்னிலங்கையில் மழை பெய்வதுண்டு. வெயிலுடன் மழையும் மாறி மாறி வரும் இம் மாதங்களில் டெங்கு முதல் சாதாரண காய்ச்சல்கள் எனப் பல்வேறு தொற்று நோய்கள் பரவுகின்றன.

நுளம்பு கடிப்பதால் டெங்குக் காய்ச்சல், மலேரியா போன்றவை வருகிறன. எலிகளின் எச்சங்களால் எலிக்காய்ச்சல் பரவுகிறது. நோயுள் ளவர் தும்முவதாலும் இருமுவதாலும் தொற்றுகிறது பன்றிக் காய்ச்சல். ரம்புட்டான் பழம் சாப்பிடுவதால் எந்தக் காய்ச்சலும் பரவுவதில்லை

**எப்படி உண்பது**

நெல்லிக்காய், மங்குஸ்தான், மாம்பழம், கொய்யாப்பழம் போன்ற எந்தப் பழத்தை வாங்கினாலும் அவற்றை உண்ண முன்னர் நன்கு கழுவிய பின்னரே உண்ண வேண்டும் என்பது தெரிந்ததே. பழத்தின் உட்புறம் கிருமிகள் தீண்டாது சுத்தமாக இருக்கும் என்ற போதிலும் அவற்றின் தோலான்து பலவித் அழுக்குகளாலும் கிருமிகளாலும் மாசடைந்திருக்கக் கூடும்.

ஏனெனில் பழங்களைப் பிடுங்கி நிலத்தில் போட்டிருப்பார்கள். நிலத்தில் நாய் பூனை போன்ற பிராணிகளின் மலம், குருவிகளின் எச்சம், மனிதர்களின் கழிவுகள் போன்ற பலவற்றிலிருந்த கிருமிகள் பழத்தின் தோலை மாசுபடுத்தியிருக்கும். பழங்களை பறித்த இடங் களிலிருந்து விற்பனை செய்யும் இடத்திற்கு கொண்டுவரும் பயன்படுத்தும் பைகள் சாக்கு போன்றவற்றில் இருந்தும் கிருமிகள் பரவியிருக்கும்.

அதேபோல தெருவோரம் வைத்து விற்கும்போதும் காற்றி லிருந்தும் பழங்களைக் கையாளும் மனிதர்களின் கரங்களிலிருந்தும் பலவிதமான கிருமிகள் அவற்றின் தோலில் படிந்திருக்க வாய்ப் புண்டு.

என்வேதான் ரம்புட்டான் முதல் வேறு எந்தப் பழத்தை வாங்கினாலும் சாப்பிட முன்னர் நன்கு கழுவ வேண்டும். இரண்டு தடவைகளா வது கழுவ வேண்டும். அல்லது ஓடும் நீரில் கழுவ வேண்டும்.

கழுவிய பின்னரும் கூட ரம்புட்டான் தோலை வாயினால் கடிக்க வேண்டாம்.

கத்தியினால் தோலை வெட்டி அகற்றிய பின்னர் மீண்டும் கைகளை நீரினால் கழுவி அதன் பின்னரே பழத்தை எடுத்து உண்ணுங்கள். சுத்தப்படுத்திய பழங்களைச் சாப்பிடுவதால் நோய்கள் எதுவும் தொற்றாது. உள்ளிருக்கும் சுளைகள் சுத்தமானவை.

மாறாகச் சுத்தப்படுத்தாமல் உண்டால் வயிற்றோட்டம், வாந்தி, தைபொயிட், செங்கண்மாரி, குடற் பூச்சிகள் போன்ற பல்வேறு நோய்களுக்கும் ஆளாகக் கூடும் என்பதை மறுப்பதற்கில்லை

**ரம்புட்டான் பழம் பற்றி**

ரம்புட்டான் இலங்கையில் பிரபல்யமாக இருந்தாலும் இதன் பூர்வீகம் இந்தோனேசியா என அறியப்படுகிறது.

இது அதிக நீர்ச் சத்து அதிகம் கொண்ட பழமாகும். ஆயினும் பழத்தின் சாப்பிடக் கூடிய பகுதியின் 100 கிராமிலிருந்து 64 கிலோ கலோரியளவு சக்தி கிடைக்கும். அதேவேளை புரதம் ஒரு கிராம் உள்ளது. கொழுப்பு மிகக் குறைவாக 0.1 கிராம் மட்டுமே உள்ளது. கல்சியம், பொஸ்பரஸ் போன்ற கனிமங்களும், ரைபோபிளேவின், தயமின், விற்றமின் சீ போன்றவையும் நிறையக் கிடைக்கின்றன.

இதன் காரணமாக இந்தோனேசியா. மலேயா போன்ற நாடுகளில் நீரிழிவு, பிரஸர் போன்ற நோய்களுக்கான வீட்டு மருந்தாக உபயோகிக்கப்படு கிறது. காய்ச்சலுக்கு மருந்தாக இதன் பட்டைகளை உபயோகிப் பதாகவும் தெரிகிறது.

ரம்புட்டானால் காய்ச்சல் வருகிறது என நம்மவர்கள் சொல்ல காய்ச்சலுக்கு மருந்தாக அதே ரம்புட்டானை வேறு நாடுகளில் பயன்படுத்துவது சுவார்ஸியமான தகவலாகப்படுகிறது. இருந்த போதும் இதனால் காய்ச்சல் வருகிறது என்பது தவறான கருத்து என்றே சொல்ல வேண்டும்.

**வேறு பழங்கள் பற்றிய தவறான எண்ணங்கள்**

ரம்புட்டான் பற்றி மட்டுமல்ல

( 22 ஆம் பக்கம் பார்க்க)

காய்ச்சல் என்பது தனி ஒரு நோயல்ல என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். தடிமன் காய்ச்சல், டெங்குக் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல், தைபொயிட் காய்ச்சல் எனப் பலவகை இருக்கின்றன. இவை யாவம் கிருமிகள் தொற்றுவதாலேயே வருகிறது.

# மனித உறவுகள் மேம்பட 21 சிறந்த வழிகள்.....

1. தானே பெரியவன், தானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள். (Ego)
2. அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talks)
3. எந்த விசயத்தையும் பிரச்சினையும் நாசூக்காகக் கையாளுங்கள். (Diplomacy)
4. விட்டுகொடுங்கள். (Compromise)
5. சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துதான் ஆகவேண்டும் என்று உணருங்கள். (Tolerate)
6. நீங்கள் சொன்னதே சரி. செய்வதே சரி என்று கடைசிவரை வாதாடாதீர்கள். (Adamant Arguments)
7. குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள். (Narrow Mindedness)
8. உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)
9. மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)
10. அளவுக்கு அதிகமாய், தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)
11. எல்லோரிடத்திலும் எல்லா விசயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிகொண்டிருக்காதீர்கள்.
12. கேள்விப்படுகிற எல்லா விசயங்களையும் நம்பிவிடாதீர்கள்.
13. அற்ப விசயங்களையும் பெரிதுபடுத்தாதீர்கள்.
14. உங்கள் கருத்துகளில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக்கொள்ளுங்கள். (Flexibility)
15. மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். (Miss understanding)
16. மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
17. புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும்கூட நேரமில்லாதது போல நடந்து கொள்ளாதீர்கள்.
18. பேச்சிலும், நடத்தையிலும் திமிர்த்தனத்தையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பாட்டையும் காட்டுங்கள்.
19. அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து அளவளாவுங்கள். (Frankness)
20. பிணக்கு ஏற்படும்போது, அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள். (Initiative)
21. தேவையான இடங்களில் நன்றியையும், பாராட்டையும் சொல்ல மறக்காதீர்கள். பாராட்டுக்கு மயங்காத மனிதனே இல்லை. அதுவே உங்களுக்கு வெற்றியாக அமையும்.





தமிழ் சினிமாவையே புரட்டிப் போட்ட திரைப்படம் என்று சொல்லும் அளவிற்கு இல்லாவிட்டாலும், தமிழ் சினிமாவில் ஒரு புது முயற்சி என்று உறுதியாக சொல்லக்கூடிய விதத்தில் படமாக்கப்பட்டிருக்கிறது இன்று நேற்று நாளை திரைப்படம். சி.வி.குமார் தயாரித்த படமா? அப்ப நம்பிக் கையுடன் பார்க்கலாம் என்ற நம் பகத்தன்மையை மேலும் வளர்த்திருக்கிறது இன்று நேற்று நாளை.

ஒளியின் வேகத்தைவிட அதி வேகமாக பயணித்து இறந்தகாலத்திற்கும், எதிர்காலத்திற்கும் செல்லக்கூடிய கால இயந்திரம் ஒன்றை 2065 இல் உருவாக்கிறார் விஞ்ஞானி ஆர்யா. அதை பரிசோதித்து பார்க்கும்போது அந்த இயந்திரம் 2015-க்கு சென்றுவிட்டு திரும்ப வராமல் போகிறது. சொந்தமாக தொழில் செய்து பணக்காரனாக வேண்டும் என்ற இலட்சியத்துடன் வாழும் விஷ்ணு எடுக்கும் முயற்சிகளெல்லாம் தோல்வியடைவதில் முடிகிறது. இப்படி வேலைக்கு போகாமல் இருந்தால் கண்டிப்பாக என்னை மறந்துவிட வேண்டும் என்கிறாள் மிகப்பெரிய தொழிலதிபரான ஜெயபிரகாஷின் மகள் மியா ஜார்ஜ்.

சுண்டல் விக்குற காதலுக்காக கொள்கையை தளர்த்தி வேலைக்குப் போக முடிவெடுக்கும் விஷ்ணுவிடம் கிடைக்கிறது காலம் தாண்டி வந்த அந்த இயந்திரம். மியா ஜார்ஜின் தந்தை ஜெயபிரகாஷை மிரட்டி நிலம் கையகப்படுத்தும் ரௌடியை 'என்கவுண்டரி'ல் போட்டுத்தள்ளுகிறது பொலிஸ். கால இயந்திரத்தை வைத்து சம்பாதிக்க காணாமல் போன பொருட்களை கண்டுபிடித்து தருவதாக கூறி விளம்பரம் செய்கிறார்கள் விஷ்ணுவும் ஜோதிட நண்பனான கருணாகரனும்.

கருணாகரனிடம் மக்கள் தொலைந்து போன பொருள் பற்றி தகவல் தர இயந்திரத்தின் உதவியால் கடந்த காலத்திற்குச் சென்று காணாமல் போன பொருளைப் பற்றி அறிந்து சொல்கிறார் விஷ்ணு. இப்படி இறந்தகாலம் செல்லும்போது இவர்கள் செய்யும் ஏதோ ஒரு தவறினால் அந்த ரௌடி 'என்கவுண்டரி'ல் இருந்து தப்பித்துவிடுகிறான். தன்னைக் கொல்ல நினைத்த ஜெயபிரகாஷ் குடும்பத்தை அழிக்கவும் முயற்சி செய்கிறான். கால இயந்திரத்தின் உதவியுடன் விஷ்ணு இதை எப்படி தடுக்கிறார்? வில்லனை எப்படி அழிக்கிறார்? காதலியை எப்படி காப்பாற்றுகிறார்? என்பதெல்லாம் பரபரப்பான க்ளைமாக்ஸ்.

குறைவான கதாபாத்திரங்கள் படத்திற்கு வலிமை சேர்த்திருக்கின்றன. எப்போதும் பரபரப்பான கதாபாத்திரத்தில் விஷ்ணு கொஞ்சம் மெனக்கெட்டு நடித்திருக்கிறார். வெற்றியும் பெற்றிருக்கிறார். மியா ஜார்ஜ் ஆர்ப்பாட்டமில்லாத நடிப்பினாலும், குறும்புத்தனங்களினாலும் மனதில் பதிகிறார். கருணாகரனின் பிரதிபலிப்புக்கள் தான் படம் முழுக்க பட்டையைக் கிளப்புகின்றன.

Hip Hop ஆதியின் இசையில் பாடல்கள் சாதாரணமாக இருந்தாலும், ஒளிப்பதிவின் உதவியால் பாடல்காட்சிகள் பொறுமையைச் சோதிக்கவில்லை. ஒளிப்பதிவாளர் வசந்த் நிச்சயமாக பாராட்டப்படவேண்டியவர். 'கிராஃபிக்ஸ்' வேலைகள் அதிகமாக இருக்கும் படத்தில் ஒளிப்பதிவாளருக்குத் தான் அதிக கரிசனை தேவை. தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட்டிருக்கிறார் வசந்த்.

அதிகம் குழப்பாமல், 'டுவிஸ்ட்' என்ற பெயரில் அதிகம் சோதிக்காமல் மிகவும் சாதாரணமாக கதையை சொல்லியிருக்கிறார். முதல் பாதியில் வரும் காட்சிக்கும், இரண்டாம் பாதியில் வரும் காட்சிக்கும் உள்ள தொடர்பையும் காட்சிப்படுத்தியிருக்கும் விதம் பாராட்டத்தக்கது. படம் முடிந்து வெளியே வரும்போது நம்ம கைலயும் ஒரு "ரைம் மிஷின்' கிடைச்சா எப்படி இருக்கும்" என்ற ஒரு கற்பனையை மனதில் ஏற்படுத்துவது தான் இயக்குநரின் வெற்றி. முதல் படத்திலேயே புதுமுயற்சியின் மூலம் அங்கீகாரம் பெறும் ரவிகுமார் போன்ற இயக்குநர்கள் வருங்காலங்களில் தமிழ் சினிமாவை அடுத்த பரிணாமத்திற்கு கொண்டு செல்வார்கள் என நம்புவோம்.



# இவ்வார இராசி பலன்

**08.07.2015 –14.07.2015**

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

தைரியம் நிறைந்த செயலால் புகழ் பெறுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களால் உதவி உண்டு. வீடு, வாகனத்தில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். புத்திரர், உங்கள் சொல் கேட்டு நடப்பர். எதிரிகள் இடம் மாறுகிற நன்னிலை உண்டு. இல்லறத் துணை, பாசத்துடன் நடந்து கொள்வார். புதியவர்களின் ஆதரவால் தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள், புத்தாடை, அணிகலன் வாங்குவர். மாணவர்கள், திறமையை வளர்த்துக் கொள்வர்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

செலவில் சிக்கனம் வேண்டும். கடன் வாங்குவதை தவிர்க்க வேண்டும். உறவினர்கள், புதிய சொந்தங்களை அறிமுகம் செய்வர். பொது இடங்களில் அதிகம் பேச வேண்டாம். வாகன பயன்பாடு சீராக இருக்கும். புத்திரர்களின் மனக்குறையை ஓரளவு சரிசெய்வீர்கள். உடல் நலத்தைப் பேணுவதில் அக்கறை வளரும். இல்லறத் துணை, ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபார நடைமுறையில் மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள், கடின உழைப்பால் இலக்கை நிறைவேற்றுவர்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். புத்திரர்களின் பிடிவாதத்தைப் போக்க, பொறுமையுடன் ஆலோசனை சொல்ல வேண்டும். வழக்கு, விவகாரங்களில் பொறுமையான அணுகுமுறையை பின்பற்றவும். இல்லறத் துணை, குடும்பநலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள், தாமதமாக பணி இலக்கை பூர்த்தி செய்வர். பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க கூடாது.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

விருந்து, விழாவில் கலந்துகொள்வீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயல்பாடுகளில் குளறுபடி ஏற்படலாம். பகைமை உணர்வுடன் பழகியவர்கள் கூட, தங்கள் தவறை உணர்ந்து உங்களிடம் சுமுகமாக இருப்பர். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனத் தேவை அதிகரிக்கும். பணியாளர்கள், ஓரளவு சலுகை பெறுவர். மாணவர்கள், நன்றாக படிப்பர்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

வீடு, வாகனம் வாங்க நிதியுதவி கிடைக்கும். புத்திரர்கள், உங்களின் அன்பைப் பெறுவதில் அதிக கவனம் கொள்வர். நோய் தொந்தரவு குறைந்து, உடல்நலம் பலம் பெறும். இல்லறத் துணை, உங்களின் தியாக மனதை புரிந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து, உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

வாகன பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்கள், தங்கள் தேவையை நிறைவேற்ற பிடிவாதம் செய்வர். எதிரிகள் விலகுவர். இல்லறத் துணையுடன் இணக்கமான போக்கு இருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிகளை செய்வீர்கள். பணியாளர்களுக்கு, நிறைந்த வருமானம் கிடைக்கும். பெண்கள், உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள், விரும்பிய பொருளை பரிசாகப் பெற அனுகூலம் உண்டு

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உறவினர்களின் கருத்தில் உள்ள நியாயத்தை ஏற்று, திருத்திக் கொள்வீர்கள். சொத்து பராமரிப்பில் நம்பகமானவர்களை பணியமர்த்த வேண்டும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத் துணை, அன்புடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. பணியாளர்கள், சேமிக்கும் அளவு சலுகை பெறுவர். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், புதிய முயற்சி முறையால், படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

புத்திரர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்து, முன்னேற்றத்திற்கு வழி வகுப்பீர்கள். உடல்நிலை சுமாராக இருக்கும். இல்லறத் துணையின் மனதில் நம்பிக்கையை வளர்க்கும் வகையில் நடந்து கொள்ளுங்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள மந்த நிலையை, புதிய திட்டத்தால் சரி செய்வீர்கள். பணியாளர்களுக்கு, ஓரளவே சலுகை கிடைக்கும். பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், புதிய நண்பர்களிடம் பழகுவதில் நிதானம் வேண்டும்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

தாயின் அன்பு, ஆசி, புதிய பணிகள் நிறைவேற துணை நிற்கும். புத்திரரை நல்வழி படுத்துவதில், இனிய அணுகுமுறையை பின்பற்ற வேண்டும். எதிர்மறையாக இருந்த செயல் ஒன்று, அனுகூலம் தருவதாக மாறும். இல்லறத் துணை, உங்கள் நலன் சிறக்க உதவுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, மாற்று உபாயம் நன்மை தரும். பணியாளர்கள், பணியிடத்தின் சூழல் உணர்ந்து செயல்பட வேண்டும்.

### மகரம்

**திருவோணம், அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

சுக்கிரன், செவ்வாய், கேதுவின் அனுகூலமும் உண்டு. தந்தையின் பூர்வ புண்ணிய பலன், சில நன்மைகளைத் தரும். புதிய வாகனம், வீடு வாங்குகிற முயற்சி நிறைவேறும். புத்திரர்கள், உங்களின் சொல்கேட்டு நடந்து கொள்வர். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். சுற்றுலா சென்றுவர திட்டம் உருவாகும். இல்லறத் துணை, அதிக பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்கள், நிறைந்த சலுகை பெறுவர்.

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

குடும்ப உறுப்பினர்களின் கருத்துகளை மதிப்பதால், ஒற்றுமை வளரும். வாகன பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்கள், பிடிவாத குணத்துடன் செயல்படுவர். இல்லறத் துணையுடன் கருத்து வேறுபாடு வரலாம்; பொறுமை தேவை. தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்திடம் நற்பெயர் பெறும் வகையில் செயல்பட வேண்டும். பெண்கள், நகை பாதுகாப்பில் கூடுதல் கவனம் பின்பற்றவும். மாணவர்கள், ஓரளவுக்கு படிப்பர்.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

புத்திரர்களின் நற்செயல், பெருமை தேடித்தரும். உடல்நலம் பேணுவதில் அதிக கவனம் வேண்டும். இல்லறத் துணை வழிசார்ந்த உறவினர்களின் கருத்தையோ, செயலையோ குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இப்போதைய நிலை நீடிக்கும். பணியாளர்கள், பணியில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு, அதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவர். பெண்கள், இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள், ஆசிரியரிடம் பாராட்டு பெறுவர்.

# சுதந்திர வேட்கை

**விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 93**

● அடேல் பாலசிங்கம்



“இல்லை அன்ரி” போராளியின் குரலில் ஆற்றாமை இழையோடியது.” அது இந்தியாக்காரர். பலாலி இராணுவ முகாமில் இருந்து யாழ்ப்பாண நகரம் மீது ஷெல் அடித்துக்கொண்டிருக்கிறார்கள்” யாழ்ப்பாண நகரம் மீது ஷெல் அடி நாள்கணக்கில் நடந்து கொண்டிருந்தது. முன்பு ஒரு நாள் எமது போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கிக் கொண்டிருந்த இந்திய இராணுவம் இன்று தனது இராணுவ, ஆற்றலையும் , ஆயுதங்களையும் எமக்கு எதிராகத் திருப்பி விட்டிருந்தது. இது தலைகீழான ஒரு நிலைமை மாற்றம். ஆசிய அரசியல் அரங்கின் சகடவோட்டம். சென்னையில் இருந்த காலம் தொடக்கம் , விடுதலைப் புலிகளுக்கும் புதுடில்லிக்கும் இடையே அடிக்கடி நிலவிய கருத்து மோதல், முரண்பாடு, சந்தேகம் ஆகியவை அடங்கிய உறவின் சிகரமாக இப்போது பகிரங்கமான போர் ஒன்று, விடுதலைப்புலிகளுக்கும், இந்திய அமைதிப்படைக்கும் இடையே நடந்து கொண்டிருந்தது. இது நடந்தது 1987 ஒக்டோபரில்.

விடுதலைக்கான போராட்டத்தில் வரிந்து செல்லும் கொடுந்துயர் நிறைந்த இந்தக் கால கட்டத்தைப் பின்னோக்கிப் பார்க்கும் போது, எதிரும் புதிருமான உணர்வுகள் சலனப்பட்டு மிதந்து வரும். தமிழர் தாயகத்தில் இந்தியா, சிறிலங்கா, விடுதலைப்புலிகள் ஆகியோரின் அரசியல் நலன்கள் முரண்பட்டவையாக இருந்த போதிலும் , போருக்கான காரணத்தை இப்போது வகைப்படுத்திப் பார்க்கும் போது தப்பபிப்பிராயமும் அச்சமுமே அடிப்படைக் காரணம் எனக் கூறலாம். ஒருவர் மீது குற்றச்சாட்டுக்களை மாறி மாறிச் சுமத்திக் கொண்டிருந்தாலும், இறுதியில் இந்தப் போரின் கொடிய அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தவர்கள் தமிழ் மக்களே என்பது தான் உண்மை. இதில் , ஈடு செய்ய முடியாத ஒப்பற்ற மனித வளத்தையும், பொருள் வளத்தையும் தமிழினம் பறி கொடுத்தது. அதில் எதிர் வார்த்தைக்கே இடமில்லை. தாக்குதலுக்கு உள்ளான வேளையில் தமிழீழ மக்கள், பாராட்டத்தக்க வகையிலும் தனியொரு இனமாக, ஒன்றுபட்டு நின்றார்கள். வளைந்து கொடுக்க மறுத்தார்கள். தமது வரலாற்றின் நெருக்கடி மிக்க இந்தக் காலப் பகுதியில், இரக்கமற்ற கொடிய எதிரிக்கு முகம் கொடுக்கும் கட்டத்தில் உண்மையிலேயே மலைக்க வைக்கும் துணிச்சலோடும், தனித்துவத்தோடும் அளவிட முடியா மனோ பலத்தோடும் தமிழ் மக்கள் நிமிர்ந்து நின்றார்கள்.

அவல சம்பவங்கள் அடுதொடராக நிகழ்ந்தன. அவை ஒரு புறம் மக்களின் தேசிய உணர்வுகளை ஒன்று திரள வைத்து, கூட்டு விழிப்புணர்வைத் தோற்றுவித்தன. மறுபுறம், இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பாரதூரமான தப்பபிப்பிராயங்களையும் முரண் பாடுகளையும் தோற்றுவித்தன. இதனால், இரு சாராருக்கும் இடையே விரிசலும் பகைமை உணர்வும் வளர்ந்தன. விடுதலைப்புலி போராளி களில் முன்னணியில் இருந்தவர்களும் மக்களால் நேசிக்கப்பட்டவர் களு மான சிலருடைய மரணம் தவிர்க்கப்படக் கூடியதும், அனாவசிய மாக வும் இருந்த போதும், அது தோற்றுவித்த சமூகச் சீற்றத்தில் நானும் மன சாரப் பங்கு கொண்டேன்; இறந்த அந்தப் போராளிகள் மாவீரர் மட்டுமல்ல, எமது நெருங்கிய கூட்டாளிகளுமாவார். ஆனால் உலகின் மிகப் பெரிய இராணுவத்தைக் கொண்ட ஒரு பிராந்திய வல்லரசுக்கும் ஒரு கெரில்லாப் படைக்கும் இடையே நிலவிய பொது உறவு.

(பதிவு தொடரும்)



# விபத்துக்களால் பலியாகும் அப்பாவி உயிர்கள்

**- செங்கோடன்**

உலகெங்கிலும் வருடாந்தம் நிகழும் வீதி விபத்துக்களில் சிக்கி மில்லியன் கணக்கான அப்பாவி மக்கள் இறந்துகொண்டிருக்கின்றனர். இலாப நோக்கு கருதியும், அரசியல் இலாபம் கருதியும் சாமர்த்தியமாக திட்டமிட்டு நடத்தப்படும் தேவையற்ற யுத்தங்களில், வருடாந்தம் மில்லியன் கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை அரசியல்வாதிகளும், செயற்பாட்டாளர்களும், புரட்சியாளர்களும் தடுக்க தவறுவதை போன்று, மனித கவனயீனங்களால் ஏற்படும் கொடூர விபத்துக்களில், மில்லியன் கணக்கான அப்பாவி மக்களின் உயிர்கள் பலியாவதை, அரசுகளும் மக்களும் தடுக்க தவறிவருகின்றனர். இக்கட்டுரை கடந்த வருடம் இலங்கையில் நடந்த கொடூர விபத்துக்கள் பற்றியும் அவற்றை தடுக்க எடுக்கவேண்டிய சில நடைமுறைகள் பற்றியும் ஆராய்ந்து நிற்கிறது.

கடந்த ஆண்டு இலங்கையில், முப்பத்திஜயாயிரத்திற்கும் அதிகமான விபத்துக்கள் நடந்த தாக பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அவற்றில் ஆறாயிரத்துக்கும் அதிகமானவை அதிகோரமானவை என ஊடகங்களிற்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்ட இலங்கை பொலிஸ் திணைக்கள ஊடகப் பேச்சாளர், அவற்றால் இரண்டாயிரத்து முந்நூறுக்கும் அதிகமான அப்பாவி மக்களின் உயிர்கள் பலி கொள்ளப்பட்டிருப் பதாக தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டினை விட 2014ஆம் ஆண்டில் நடந்த விபத்துக்களின் எண்ணிக்கை குறைவடைந்த போதிலும், விபத்துக்களால், 2013ஆம் ஆண்டில் பலியான மக்களின் எண்ணிக்கையிலும், 2014ஆம் ஆண்டில் பலியான மக்களின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுவதாக தெரிவித்த அஜித் ரோகண, மேலும் மனித கவனயீனங்களே விபத்துக்கள் நிகழ முக்கிய காரணியாக அமைகின்றது எனவும் தெரிவித்ததாக 'டெய்லி நியூஸ்' இணைய செய்திசேவை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்குலக நாடுகளில் மூன்றாம் உலக நாடுகளை விட அதிக வேகமாக வாகனங்களை செலுத்துகின்ற போதிலும் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பமானது மிக அரிதாகவே காணப்படுகிறது. மேற்குலக நாடுகளில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் கடுமையான சட்டங்கள், வேக தடுப்பு முறைகள், வாகன தரிப்பிட முறைகள், முறையான வீதி பாதுகாப்பு ஒழுங்கு முறைகள், பாதுகாப்பு கடவைகள், வீதி குறியீட்டு அட்டைகள், முறையான விழிப்புணர்வு ஆகியன விபத்துக்களில் மக்கள் சிக்காமல் இயன்ற அளவு தடுத்துவருகிறது. ஆனால் இலங்கை போன்ற மூன்றாம் உலகநாடுகளில், வாகன ஓட்டுனர்களுக்கு வீதி ஒழுங்குகள் பற்றிய போதிய அளவு விழிப்புணர்வு இன்மை, அவை பற்றிய செயன்முறையுடன் கூடிய கல்வி அறிவின்மை, வீதி ஒழுங்குகளை, சட்டங்களை (குடித்துவிட்டு வாகனத்தை ஓட்டுதல், தொலைபேசியில் பேசிக்கொண்டு வாகனத்தை ஓட்டுதல், முறையான சாரதி அனுமதி பத்திரம் இன்றி வாகனத்தை ஓட்டுதல், நித்திரைக் களைப்புடன் வாகனத்தை ஓட்டுதல், பயணிகள் மற்றும் ஓட்டுனர் இருக்கை பட்டி அணியாது வாகனத்தில் செல்தல், வாகன உதிரிப்பாகங்கள் முறையாக வேலை செய்கின்றதா என பரிசோதனை செய்யாது இருத்தல்) பின்பற்றாமை, வீதிகளில் பயணம் செய்யும் போது வாகன சாரதிகள் களைப்படையும் இடத்தோ, வாகனங்கள் பழுதடையும் இடத்தோ சாரதிகள் வீதியில் செல்லும் மற்றைய வாகனங்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லாமல் தரித்து நிற்பதற்கோ, பழுதடைந்தவற்றை உடனேயே அவ்விடத்தில் இருந்து அகற்றி திருத்தும் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு, போதிய வசதிகள் இன்மை மற்றும் முறையான காப்புறுதி செயற்திட்டம் இன்மை, அரச அதிகாரிகளின் மற்றும் வீதி பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் அசமந்த போக்கு தன்மை மற்றும் ஊழல் ஆகியன நாளாந்தம் வீதி விபத்துக்கள் அதிகரித்து செல்ல மிக முக்கிய காரணிகளாக அமைகின்றன.

மனித கவனயீனங்களால் நாளாந்தம் நடந்தேறும் வீதி விபத்துக்களால் இலங்கையில் மட்டும் அல்லாது உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்கள் பலியாகின்றன. ஆனால் அவற்றை, மனிதர்களுக்கு போதிய அளவு விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலமும் (ஊருக்கு ஊர், நகரத்திற்கு நகரம், பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வங்கிகள், பல்கலைக்கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், சாரதிகளிற்கான அமைப்பு, வழிபாட்டுத்தளங்கள் ஆகியவற்றில் விபத்துக்கள் பற்றியும் அவை உண்டுபண்ணும் தாக்கங்கள் பற்றியும் விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில் செயற்திட்டங்களை முன்னெடுக்கலாம்.) முறையான செயன்முறைக்கல்வி மூலமும் (சாரதிகளுக்கு பரீட்சை, மற்றும் செயன்முறை பரீட்சை நடத்தி சாரதி அனுமதி பத்திரம் வழங்கப்படுகின்ற போதும், வீதி [illegible]ள் மற்றும் வாகனத்தை [illegible]த்தும் முறைகள் பற்றிய போதிய அளவு செயன்முறை அறிவு அவர்களுக்கு போதிய அளவு உரிய முறையில் வழங்கப்படுவதில்லை. அவற்றை வழங்க அரசும் உரிய அதிகாரிகளும் அதன் முக்கியத்துவம் உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.) தவறிழைக்கும் சாரதிகளுக்கு அவர்கள் விடும் சிறு தவறும் ஏற்படுத்தும் விபத்துக்களின் தாக்கத்தை உணரும் வகையிலான தண்டனைகளை வழங்கியும் (உடனுக்குடன் சாரதி அனுமதி பத்திரத்தை போதுமான கால அளவிற்கு இரத்து செய்தல்), அதேபோல் தவறிழைக்கும், ஊழல் செய்யும் அரச அதிகாரிகள் மற்றும் வீதி பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் செய்யும் தவறுகளின் கடும் பின்விளைவுகளை உணரும் வகையில் கடும் தண்டனைகளை வழங்கியும் (போதிய பயிற்சி பெற்ற, துடிப்பு மிக்க, கடமை உணர்வுள்ள வீதி பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பணிக்கு அமர்துவதன் மூலம் இதனை தடுத்து நிறுத்த முடியும்.), வீதி பாதுகாப்பு கருவிகளை நவீன மயப்படுத்துவதன் மூலமும் (மூன்றாம் உலக நாடுகள் தமக்கு போதிய வசதியில்லாதவிடத்து பல்கலைக்கழக் மாணவர்களின் உதவியுடன் நவீனமயப்படுத்தப்

**“ மேற்குலக நாடுகளில் மூன்றாம் உலக நாடுகளை விட அதிக வேகமாக வாகனங்களை செலுத்துகின்ற போதிலும் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பமானது மிக அரிதாகவே. காணப்படுகிறது. மேற்குலக நாடுகளில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் கடுமையான சட்டங்கள், வேக தடுப்பு முறைகள், வாகன தரிப்பிட முறைகள், முறையான வீதி பாதுகாப்பு ஒழுங்கு முறைகள், பாதுகாப்பு கடவைகள், வீதி குறியீட்டு அட்டைகள், முறையான விழிப்புணர்வு ஆகியன விபத்துக்களில் மக்கள் சிக்காமல் இயன்ற அளவு தடுத்துவருகிறது. ”**

(22 ஆம் பக்கம் பார்க்க)

ஆ. முல்லைத்திவ்யன்

சிறுகதை

# இருள் விலகுமா...?

வளரும் பயிராக இருக்கும் போது பச்சைக்கடல் தெரிகின்ற வயல் வெளி. வெட்டு முடிந்து விட்டதால் , இப்போது காய்ந்து கருமை யடைந்து கரடு முரடாகத் கிடக்கிறது.

என் மனதும் அவ் வாறே.

வன்னியின் வயல் வெளியை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியில் நான் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கிறேன். வெயில் என் முகத்து நேரே... கொளுத்துகிறது . எனக்கு அது சுட வில்லை...

தமிழ் நிலவன் கடந்த கிழமை முழுவதும் பள்ளிக்கூடம் வரவில்லை. என்னருகே உள்ள கதிரையில் அவன் இல்லாதிருந்தமை என் மனதில் வெறு மையைத் தோற்றுவித்தது.

நான் அவனைப்பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். அவனது கிராமம் -பயிர்கள் செழித்து வளரும் செம் பாட்டுத் தரை (துறை)யாலானது. நான் அவனைக் கண்டேன். அவன் வீட்டுக்கருகில் தான் தோட்டத்தில் அந்தச் செம்பாட்டுத்தறையில் யாருடனோ புகையிலைக் கன்றுகளை நட்டுக் கொண்டிருந்தான். என்றைக் குமே நான் பார்த்திராதவாறு அவனிடத்தில் ஒரு மாற்றம் தென்பட்டது. என்னைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

மிகவும் கஸ்டப்பட்டுத்தான் பள்ளிக் கூடத்துக்கு வந்தான் என்பதை அவன் அணியும் வெள்ளைச்சேட்டும் கிழிந்து போன பழைய புத்தகப்பையும் காட்டும். தமிழ்வரலாற்றுப் புத்தகம் வாங்காமைக்காக ஆசிரியர்களால் தண்டிக்கப் பட்டிருக்கிறான். எப்போதும் அமைதியாகவே இருப் பான். ஒரு பழைய கறுத்த பாட்டாச் செருப்பு அவன் பாதங்களில் எப்போதும் இருக் கும். என்னோடு கதைக்கின்ற போது சொல்ல வந்த விடயத்தை ஆணித்தரமாயும் நிதர்சனத்துடனும் கதைப்பான்.

"இளம்பிறை கொஞ்ச நேரம் இரு மச் சான் வந்திர்றன்" என்று சொல்லி ஒரு மணல் திட்டைக் காட்டிவிட்டு வேலையில் சுறு சுறுப்பாக இருந்தான்.

தமிழ்நிலவனுடைய செம்பாட்டுத்தறைக்கு பக்கத்துத் தறையில் சில பெண்கள் பாத்தி காட்டி வெங் காயம் நட்டுக் கொண்டிருந்தார்கள். தமிழ் நிலவன் தனது கூட்டாளியுடன் தண்ணீர் இறைக் கும் இயந்திரத்துக்கு மண்ணெண்ணெய் விட்டுக்கொண்டி ருந்தான்.

ஏதோ எதிர்பாராத நெருக்கடி அவனை இந்த நிலைக்கு தள்ளியிருக்க வேண் டும். முன்பு சில தடவை வந்திருந்த போது அவனை வீட்டிலோ காளிகோவிலிலோ சந்தித்திருக்கிறேன். அப்போதெல்லாம் வீட்டின் ஓரத்தில் ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை வரலாறு. சேகுவேராவின் வாழ்க்கை வரலாறு என வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களை வாசித்துக் கொண்டிருப்பான். ஆனால், இன்று பெரும் மாற்றம் தெரிந்தது. அவன் அதிகமாக வேலை செய்ததற்கு அறிகுறியாக முகம் கறுத்து வியர்த்திருந்தது. அவன் மடித் துக் கட்டியிருந்த சாரத்தில் செம்மண் அப்பி யிருந்தது. "மன்னிக்க வேணும் இளம்பிறை உன்னைத் தனியே விட்டதுக்கு"

"சரி அதிலென்ன... ஏன் போன கிழமை முழுவதும் பள்ளிக்கூடம் வரவில்லை...?" சிறிது நேரம் தயங்கியபடியே எனது முகத்தை உற்றுப்பார்த்தான்.

"இளம்பிறை... இனி நான் பள்ளிக்கூடம் வரமாட்டேன்..." இப்படி அவன் அவன் சொல்லுவான் என்று நான் எதிர்பார்க்கேல்ல... காய்ச்சல் அல்லது ஏதேனும் சுகவீனத்தாலே தான் வராமல் இருந் தான் என்று நினைத்திருந்தேன். ஆனால்...

"ஏன்ரா தமிழ்நிலவன் சோதனைக்கு இன்னும் ஐந்து மாதம் தான் இருக்கு... அதுக்கிடையில பள்ளிக் கூடத்தை விடப்போகிறன் என்கிறாய்..."

"என்ன செய்யிறது மச்சன் அவ்வளவுக்கு வீட்டுப்பிரச்சினை அதிகரிச்சு விட்டுது. உனக்குத் தெரியும் இளம்பிறை, யுத்தம் எப்படியெல்லாம்வன்னிமண்முழுமைக்கும் துவம்சம் செய்தது என்றதைப் பற்றி, எங்க அப்பாவையும் நாங்கள் அதுக்குள்ள தான் செல்லுக்கு இரைகுடுத்தனாங்கள்.

அப்பா இருக்கிற போதில ஓரளவு தோட்ட நிலம்எங்களிட்ட இருந்தது. நாங்கள்முகாமில இருந்து வந்தபோது அப்பாவும் இல்லைத்தானே, எங்களுக்கு முதலிலேயே ஊருக்கு வந்த பக்கத்துத் தறைக்காரர் எங்கடை தறையின்ர ஒரு பகுதியையும் தங்கடை தறையோடை இணைச்சு எல்லையைப் போட்டிட்டினம். அம்மாவாலே அவையை எதிர்த்து எதுவும் செய்ய முடியேல்ல.

அதன் பிறகு அம்மா வயல் வெட்டுக்கும் கிடுகுபின்னுறதுக்கும் போய்தான் எங்களைக் காப்பாற்ற முடிஞ்சுது. நான் எப்பவோ பள்ளிக் கூடத்தை விடத்தான் யோசிச்சனான் இளம் பிறை. ஆனால் அம்மாதான் நீ படி... நான் உழைச்சுத்தருவன் எண்டு வற்புறுத்தினா. அவவின்ர ஆசையைக் கலைக்கக் கூடாது எண்டதுக்காகத்தான் இவ்வளவு நாளும் படிச்சன். இனியும் ஏலாது இளம்பிறை. அம்மாவுக்கும் ஹாட் வருத்தம் ஒருக்கால் ஹாட் அற்றாய்க் வந்திட்டுது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு கிளினிக் போய் வாறா... இனியும்நான் அவாவைப் வருத்திப்படிச்சன் எண்டால், அது உணர்ச்சியில்லாத முண்டம் செய்யிற வேலையாகத்தான் இருக்கும்.

"தமிழ் நிலவன் இப்படியும் ஒரு கெட்ட காலம் உனக்கு... ஏ.எல் சோதனைக்கு இன்னும் ஐந்தே மாதங்கள் தான்.. அது வரையும் படிப்பிக்க சொந்தக்காரர் யாரும் உதவி செய்யமாட்டினமோ...?

அப்பா?..., எங்களை விட்டுப்போனபோது எங்களுக்கு ஊர் உலகம் தெரியாது. எங்கட பெரியப்பா, பெரிய ஒரு ரீயூட்றிவைத்திருந்தார். ஓரளவு வருமானம் இருக்குத் தான் இருந்தாலும் எங்களுக்கு அவர் குறிப்பிடும் படியா எந்த உதவியும் செய்யேல்லை. அப்பான்ரைகாரியங்கள்நடந்த போது இரண்டொரு நாள் அம்மாவுக்கு ஆறுதல் சொல்லுவதற்கு அந்தக் குடும்பம் வந்து போச்சுது. அவ்வளவோட சரி. அதுக்குப் பிறகு எல்லாமே அம்மாதான். இனியும்நான் பெரியப்பாட்டை உதவி கேட்டு நின்றால், இவ்வளவு நாளும் தட்டந்தனியானாபாடுபட்டுஎங்களை ஆளாக்கி எங்கடைஅம்மாவின்ரைபுனிதமானஉழைப்புக்குத் துரோகம் செய்யிறதா இருக்கா தோ இளம்பிறை!

"... உங்கள் இரண்டு பேருக்காகவும் தான் நான் இருக்கிறன் இல்லையெண்டால் பொலுடோலைக் குடிச்சு எண்டைக்கோ செத்திருப்பன எண்டு... அம்மா சில சமயம் வருத்தப்படேக்குள்ள சொல் லுவா..."

இப்போ அவனுடைய விழிகளிலிருந்து கண்ணீர் துளிகள் சிந்தி, அவன் கன்னாங்களில் வழிந்தோடின. சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு தொடர்ந்தான்.

"இண்டைக்கு அம்மா ஒருகுறையும் வைக்கேல்ல. எங்களுக்குபகல்இல்லைஎன்றாலும் இரவிலை எங்களுக்குப் பிடிச்ச மாதிரி சமையல் செய்து தருவா, தைப் பொங்கல், தீபாவளிக்கு புது உடுப்பு எடுத்துத் தரு வா... இண்டைக்கும் எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு, நாங்கள் முகாமுக்குள்ளே யிருந்து ஊருக்கு வந்த முதல் வருசம். அப்போ எனக்கு பதினொரு வயது தான் இருக் கும். இளம்பிறை ஒரு புதுவருசத்துக்கு - அம் மாவுக்கு இரண் டோ மூன்று நாள்களுக்கு முதலே சரியான நெஞ்சுநோ என்று வேலைக்குப் போகேல்ல. சாப்பாட்டுக்கே கஸ்டமாக இருந்தது. புது உடுப்பு வேற எப்படி எடுக்கிறது. அம்மா கண்ணீரோடை படுத்திருந்ததை நான்பார்த்தன். ஆனாலும் அவ அடுத்த நாள் படுத்திருக் கேல்ல. தன்ரை வருத்தத் தையும் பொருட்படுத்தாமல் வேலைக் குப் போயிற்றா.

அதுக்கடுத்த நாள் வருசம் விடிய நாங்கள் புது உடுப்போட நிண்டம். இது தான் எங்கட அம்மா...! அவாவுன்ர பாசத்தை... வார்த்தையில சொல்ல முடியாது இளம்பிறை..." ஒருவாறு அழுகையை அடக்கிக் கண்களைத் துடைத்துக் கொண்டு அமைதியானான். நான் கேள்விப்படாத துன்பதுயரங்கள் அவன் வாழ்க்கையில் புதைந்திருந்தன. என்னால் எதுவும் பேசமுடிய வில்லை. மேற்கே சூரியன் கருமுகில்களுக்குள் தன்னைப்புதைத்துக்கொண்டிருந்தான். அந்த நெருப்புத் தணல் போன்றவனின் பாதிக்கோளம் மட்டும் தெரிந்தது.

"நீ இளம்பிறை நீ கேக்கலாம் இவ்வளவு நாளும் குடும்பக் கஷ்டம் உனக்குத் தெரியேல்லையா எண்டு. நான் எத்தனை முறை பள்ளிக் கூடத்தை விட எத்தனித்திருக் கிறேன். ஆனால், அம்மா விடேல் லை. நான் ஒரு லோஞ்சு போட்டுரைகட்டி, உத்தியோகம் பாக்கோணும் எண்டு அவவுக்கு ஆசை. எங்கட தமிழ் சேர் தான் " உங்கட பொடியன் தமிழ்ப்பாடத்தில நல்ல கெட்டிக்காரன். விளையாட்டிலையும் திறமையானவன். அவன வடிவாப் படிப்பிச்சியளெண்டால் ஒரு பெரியாளாய் வருவான்" எண்டு சொன்னாராம்.

நான் படிப்பை விடப் போறன் எண்டு சொன்னால் அம்மா அழுவா... போன கிழமை முழுக்க செம்பாட்டுத் தறையில் நான் மண்ணைக் கொத்திக் கொண்டு நிக்கிறதைப் பார்த்துட்டு ஒரே

இப்போ சூரியன் மு ழு வ து ம ா க அ டி வ ா னு க் கு ள் புதைந்து விட்டான். இருள் நம்மையும் கௌவுகிறது.

பறவைகள் தமது இருப்பிடம் திரும்பிக் கொண்டி ருந்தன. விளையாடிய சிறுவர்கள் வீதியில் கூச்சல் கும்மாளத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

தமிழ்நிலவனோ இருளில் எருக்கலைச் செடியின் கீழ் மெல்ல சரிந்து கொண்டே சொன்னான்...

" அக்காவுக்கும் வயசு வந்திட்டு. அம்மாவுக்கும் உடம்புக்கு முடியாது. இனி நான் தான் பார்த்துக் கொள்ள வேணும். மிஞ்சியிருக்கிற எங்கட இந்தத் தோட்டத்தோட வேற தோட்டங்களையும் குத்தகைக்கு எடுத்தால்... அக்காவைக் கரை சேர்க்கிறதோட... அம்மாவின்ர மருத்துவத்தையும் பார்த்துக் கொள்ளலாம்.

அவன் எழுந்து அமர்ந்து கொண்டான். நான் அவனது கரங்களை இறுகப் பற்றியிருந்தேன். அவனது குரல் தழுதழுத்தது. விரல்கள் நடுங்குவதை என்னால் உணர முடிந்தது.

அவன் எவ்வளவு வலியைப் பொறுத்துக் கொண்டு எதுவும் நடந்து விடவில்லையென்பது போல் இயல்பாக இருக்க முனைகிறான். ஓரிரு நட்சத்திரங்கள் வானில் தென்படத் தொடங்கின. நான் வந்த வழியே திரும்பிக் கொண்டிருந்தேன்.

அவனை தொடர்ந்து படிக்க வைக்க ஏதாவது செய்ய வேணும் போலிருந்தது. ஆனால், என்னால் எதுவும் முடியவில்லையே என்று எண்ணும் போது ... துன்பத்தால் என் தொண்டை அடைக்கின்றது. கைகால்கள் சோர்கின்றன... சைக்கிளையோட்ட முடியவில்லை. அது தட்டுத் தடுமாறிச் செல்கிறது.

வீதியில் யாருமில்லை. சைக்கிளை நிறுத்தி இறங்கிக் கொண்டேன். என்னையும் மீறி அழுகை வெடிக்கிறது. ஆ...தமிழ்நிலவா... எப்படியாவது பள்ளிக்கூடம் வாடா... என்று என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு முடியுமோ அவ்வளவு சத்தமாக வாய் விட்டுக் கதறினேன்.

இருளுக்குள் என் கதறல்...

வெற்று வெளிக்குள் என் கதறல்...

இளைய சமுதாயத்தின் எதிர்காலம்...

யாரும் அக்கறைப்பட மாட்டார்களா!

மீண்டும் சைக்கிளிலில் ஏறுகிறேன் ஒரு சிறு ஒளிக்கீற்றைத் தேடி...!



# விபத்துக்களால்...

( 09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டை வீதி பாதுகாப்பு கருவிகளை செய்ய முயற்சிக்கலாம். ), வைத்தியசாலைகளில் தரமுயர்த்தப்பட்ட, இருபத்துநான்கு மணிநேரமும் இயங்கும் வீதி விபத்து சேவையை செயற்படுத்துவதன் மூலமும், காப்புறுதி நிறுவனங்கள், வாகனங்கள் பழுதடையும் இடத்து அவற்றை உடனுக்குடன் மற்றைய வாகனங்களிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவ்விடத்தில் இருந்து அகற்றி திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலமும் (இவற்றை காப்புறுதி நிறுவனங்கள் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் செய்வதே கிடையாது. இதனால் பல அப்பாவி உயிர்கள் தினமும் பலியாகின்றன. உரிய அரச அதிகாரிகள் அந்தந்தக் காப்புறுதி நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.), பார ஊர்திகளின் சாரதிகள் மற்றைய வாகனங்களின் சாரதிகள் களைப்படைந்தால் தரித்து நின்று இளைப்பாறுவதற்கு பாதையின் இருமருங்கிலும் தரிப்பிடங்களை அமைப்பதன் மூலமும், (சாரதிகள் தாம் களைப்படையும் இடத்து, நேரத்தை மீதப்படுத்த மற்றும் பணம் உழைப்பதை மட்டும் கருத்தில் கொண்டு இயங்காமல், தம்முடன் பயணம் செய்யும் மற்றைய உயிர்களின் பெறுமதி அறிந்து ஓய்வெடுத்தபின் பயணத்தை தொடரவேண்டும்.) தடுத்து நிறுத்த முடியும்.

நோயாளிகளை பொறுப்புடனும் பொறுமையுடனும் சிகிச்சையளித்து காக்க வேண்டிது மருத்துவரின் முக்கிய கடமை என்பது போல், தம்முடன் பயணம் செய்யும் ஒவ்வொரு பயணிகளின் உயிரையும் பொறுப்புடனும் பொறுமையுடனும் காக்க வேண்டியது ஒவ்வொரு சாரதியினதும் வீதி பாதுகாப்பு உத்தியோகத்தர்களினதும் மிக முக்கிய கடமையாகும் என உணர்ந்து செயற்படவேண்டும். ஒவ்வொரு மனிதர் விடும் சிறு தவறும் இன்னொரு உயிரை குடிக்கும். அவற்றை உணர்ந்து மனிதர்கள் அனைவரும் செயற்படவேண்டும்.

நன்றி இனியொரு

# குழைவண்டிலில்...

( 05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து றாத்தல் பாண் வாங்கி உரப் பையில் சுற்றி வருவார்கள்.

நல்ல நினைவிருக்கிறது. அப்படியொருநாள் சாப்பிட்டு முடிய, உரித்த கோழியின் சிறகுகள் மற்றும் கழிவுகளை ஒரு 'ஷொப்பிங்' பையில் கட்டி, அதனைச் சீமெந்துப்பையில் வைத்து மடித்து - அந்தவழியால் பாருக்குக் கீழால் கால் விட்டுச் சைக்கிள் ஓடிய சிறுவன் ஒருவனை மறித்தோம். டேய் தம்பி, கரணைச்சந்தியில் சைக்கிள் கடை வைச்சிருக்கிற ஆனந்தன் அண்ணன், ஒரு சாமான் கேட்டவர். நேராப்போக நேரமில்லை. இதையொருக்காக் குடுத்துவிடுறியே.. என்று பார்சலை ஒப்படைந்தோம். சரியென்று வாங்கிக்கொண்டு போனான். நாங்கள் பேணிகளை அடுக்கிப் புளிச்சல் விளையாடத்தொடங்கினோம்.

சற்று நேரத்தில் சிறுவன் இன்னொரு பொதியோடு திரும்பி வந்தான். அண்ணை, குடுத்திட்டன். மறக்காமல் குடுத்துவிட்டதுக்கு நன்றியாம். போனமுறை நீங்கள் வந்தபோது தர மறந்திட்டாராம். இதை உங்களிட்டை குடுக்கச்சொன்னவர் என்று பொதியைத் தந்தான். வாங்கித் திறந்து பார்த்தோம். நாலைந்து பழைய ரியூப் ஒட்டுகிற நெளிஞ்சுபோன 'சொலுஷன் ரின்', கொஞ்சம் 'போல்ஸ்', ஒட்டுப்போட இடமேயில்லாமல் ஒட்டியிருந்த ரியூப், ஒரு 'பெடல்', என்று அவருக்கே உரித்தான சில பொருட்கள். பெரிய கிலிசைகேடாய்ப் போய்விட்டது.

மிகுந்த கற்பனை வளம் உள்ள மனிதரைத் தவிர்த்து வேறுயாரால் இப்படிச் செய்யமுடியும்.?

எனது ஒன்றிரண்டு சிறுகதைகளில் ஐயாத்துரை 'மாஸ்ரர்' என்று ஒருவர் இருந்திருப்பார். அதுவொரு நிஜமான பாத்திரம்தான். அவரிடம் நான் நாடகங்கள் பழகியிருக்கிறேன். எப்பொழுதும் பெண்வேஷம்தான் கிடைக்கும். வேஷங்களுக்கான பொருட்களை ஒரு மாதத்திற்கு முன்னர்தான் எல்லோரும் தயார் செய்வார்கள். என்னிடம் மட்டும் நீண்ட கூந்தல் மயிரும், இரண்டு பாதிச் சிரட்டைகளும் நிரந்தரமாயிருந்தன. அதைப்பற்றி இங்கே எழுதியிருக்கிறேன். அப்படியொரு சிவராத்திரிநாள், கிளம்பிப்போய்க்கொண்டிருக்கிறோம். திடீரென்று வானத்தில் நான்கு வெளிச்ச வட்டங்கள், வண்ணங்களில் வெடித்துப்பெரிதாகித் தூர்ந்தன. இராணுவத்தினரின் 'பரா லைற்' அப்படி ஒளிர்வதில்லை. அது வெளிர்நிறம். இத்தனை அழகில்லை.

fireworksd6Fire works என்ற வார்த்தையைக்கூட நாங்கள் அப்பொழுது அறிந்திருக்கவில்லை. முதலில் ஏதாவது வெடிபொருட்களாயிருக்கலாம் என்று பயந்தோம். இந்தியக்கடலில் உதவிகேட்கும் கப்பல் ஒன்றின் சமிக்ஞையாக இருக்கலாமென்றோ, அல்லது கடற்படையினர் ஒருவித கொண்டாட்ட மனநிலையில் ஏவியிருக்கலாமோ என்பதையெல்லாம் யோசிக்கிற அறிவுமட்டம் குறைவு.

ஐயாத்துரை மாஸ்ரர், திடீரென்று கைகளை மேலே குவித்து, 'என்ரை சிவபெருமானே வந்துட்டீரோ' என்று கதறினார். பிள்ளைகாள் இந்த வருஷப் பஞ்சாங்கத்தில் சிவராத்திரியன்று இப்படி நடக்குமென்று உள்ளது. பார்க்கக் கிடைத்தவர்களுக்கு முத்தி நிச்சயம். எல்லோரும் கும்பிட்டுக்கொள்ளுங்கள்..

நல்லவேளையாக ஐயாத்துரை மாஸ்ரர் வழமையாகப்பாடும் தோடு டைய செவியனைப்பாட முயற்சிக்க வில்லை. நாங்களெல்லோரும் கையெடுத்துக் கும்பிட்டோம். எனக்கென்ன ஆச்சரியமென்றால், சைக்கிள் கேப்பில - ஐயாத்துரைமாஸ்ரர் பஞ்சாங்கக் கதையை எப்படிப் புனைந்தார் என்றுதான். அவர் புனையக்கூடிய ஆள்த்தான். ஒருமுறை அவரது நாடகமொன்றில் இராமன், தன்னிடமுள்ள ஈட்டியை நிலத்தில் குத்த அவ்விடத்திலிருந்து தண்ணீர் சீறிப்பாய்வதுபோல ஒரு காட்சியிருந்ததாம். அதனால் மேடைக்கு கீழே ஒருவனை தண்ணீர் பைப்போடு இருத்தி, இராமன் ஈட்டியைக் குத்தியதும் தண்ணீரைப் பாய்ச்சு என்று சொல்லியிருந்தாராம். அவனோ இராமன் எப்பொழுது குத்துவான் என்று அத்துவாரத்திலேயே கண்ணை வைத்திருக்கிறான். குத்து கண்ணில் இலேசாகப்பட்டுவிட்டது. நிலைகுலைந்து மீள்வதற்குள் காட்சி முடிந்துவிட்டது. அடுத்தகாட்சியில் மழைவேண்டி யாகம் வளர்த்தார்களாம். ஓமகுண்டலத்தைச் சுற்றியிருந்த முனிவர்கள் தீவளர்த்து வானத்தையே பார்த்தபடியிருக்க, திடீரென்று ஓமகுண்டலத்திலிருந்து தண்ணீர் சீறிப்பாய்ந்ததாம். முனிவர்களாக நடித்த சிறுவர்கள் கலவரப்பட்டு எழும்பி ஓட, திரையை மூடியபோது ஐயாத்துரை மாஸ்ரர் அறிவித்தாராம்.

இப்படியாக யாகத்தின் மகிமையு ணர்ந்த பூமாதேவி, தன்னையே பிளந்து தண்ணீரைப் பாய்ச்சலானாள்..

# பழங்களும்...

( 17ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறு பழங்கள் பற்றியும் எமது சமூகத்தினரிடையே பல தவறான எண்ணங்கள் இருக்கவே செய்கின்றன. அவை பற்றிய விழிப்புணர்வு தேவை.

முழுகிப் போட்டு மாம்பழம் சாப்பிட்டன். தொண்டை கட்டி சளியோடை காய்ச்சல் வந்துவிட்டது எனத் தன்னைத்தானே நொந்து கொண்டாள் அரச நிறுவனம் ஒன்றில் அதிகாரியாகப் பணியாற்றும் ஒரு பெண்மணி.

நானும்தான் முழு மாம்பழம் சாப்பிட்டனான். எனக்கு ஒண்டும் இல்லைதானே என்றார் கணவன். மற்றவர் முன்னாலாவது தனது வீரத்தைக் காட்டிய பெருமை முகத்தில் படர்ந்தது.

இந்தச் சளித் தொல்லை 'யோடை நாளாந்தம் அல்லாடுறன். வாழைப்பழத்தை தொடுறதே இல்லை என்றார் இன்னொரு பெரியவர்.

தயங்காமல் வாழைப்பழம் தினமும் சாப்பிடுங்கோ. இவ்வளவு நாளும் வாழைப்பழத்தை கைவிட்டும் சளித்தொல்லை தீரவில்லை என்றால், உங்கடை சளிக்கு வாழைப்பழம் காரணம் இல்லை என்றுதானே அர்த்தம் என்றேன் நான்.

சிறிது காலத்திற்கு முன்னர் Imperial College of London ல் செய்யப்பட்ட ஒரு ஆய்வானது தினமும் ஒரு வாழைப்பழம் சாப்பிடும் குழந்தைகளுக்கு ஆஸ்மா நோய் வருவதற்கான சாத்தியம் சாப்பிடாதவர்களை விட 34 % குறைவு என்கிறது. எனவே சளித்தொல்லைக்குக் காரணம் வாழைப்பழம் அல்ல என்பது தெளிவாகிறது.

அதேபோல பிரஷர் வராமல் தடுப்பதற்கும் அதைக் கட்டுப் படுத்துவதற்கும் வாழைப்பழத்தில் உள்ள கனிமமான பொட்டாசியம் உதவும். இதற்கு எதிர்மாறாக கறி உப்பில் உள்ள சோடியம் சத்து பிரஷரை உயர்த்தும் என்பது பரவலாகத் தெரிந்த விடயமே. அத்துடன் குருதியில் பொட்டாசி யம் அதிகளவில் இருப்பதானது பல்வேறு நோய்களால் ஒருவர் மரணிக்கக் கூடிய சாத்தியத்தை 20% ஆல் குறைக்கிறது என்கிறது மற்றொரு ஆய்வு.

வாழைப்பழம் பற்றிய தவறான கருத்துகளை உதறி ஒதுக்க வேண் டும். அது மிகச் சிறந்த பழங்களில் ஒன்று என்பதால்தான் உலகில் ஆகக் குறைந்தது 10% நாடுகளில் பயிரடப்படுகிறது. பலராலும் விரும்பி உண்ணப்படுகிறது.

மாம்பழத்தில் 20ற்கு மேற்பட்ட விட்டமின்களும் தாதுப் பொருட் களும் உண்டு. அதிலுள்ள zeaxanthin என்ற ஒட்சிசனெதிரி ஆனது கண்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய நீல ஒளிக் கதிர்களை வடித்தெடுப்பதன் மூலம் மக்கியுலர் டிஜெனரேசன் (Macular degeneration) என்ற கண்பார்வை இழப்பு நோயைத் தடுக்கும் எனக் கூறுகிறார்கள்.

அத்துடன் மாம்பழத்தில் உள்ள பீற்றா கரோட்டின் என்ற பொருளானது சளி ஆஸ்த்தா போன்றவற்றை தடுக்கும் ஆற்றல் கொண்டது. பப்பாளி, பூசணி, புரோகோலி, கரட் போன்றவற்றிலும் இது நிறைய உண்டு. அத்துடன் புரஸ்ரேட் புற்று நோய், பெருங் குடல் புற்று நோய் போன்றவற்றையும் தடுக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு வகைப் பழங்களிலும் பல போஷணைப் பொருட்கள் உண்டு. அவை பல நோய்களைத் தடுக்கும் ஆற்றல்கள் கொண்டவை. ஆயினும் அவற்றை விபரிக்க கட்டுரையின் நீளம் இடம் தராது.

ஒவ்வொரு வேளை உணவுடனும் ஏதாவது ஒரு பழத்தையாவது உண்ணுங்கள். நோயற்ற வாழ்வு வாழ அது கை கொடுக்கும்.







உங்கள் அன்பு குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சி உங்களின் ஒவ்வொரு அன்பு ஸ்பரிசத்தில் தொடங்குகிறது. தண்ணீரில் குளிக்கும் பொழுது அவளது மழலை சப்தம், உங்களின் குரல் கேட்டு இசைக்கும் அவளது குறும்புத்தனமும், ஒவ்வொரு குளியலிலும் அவளுக்கு கிடைக்கிறது. JOHNSON'S குளியலின் மிதமான நறுமணம், சிறிய சிறிய குமிழிகள், குளியலுக்கு பிறகு மென்மையான பவுடரின் மெல்லிய ஸ்பரிசம் இந்த தருணத்தை இன்னும் விசேஷமாக்குகின்றன. குழந்தையின் குளியல் தூய்மையை மட்டுமா தருகிறது? அளியுங்கள் இன்னும் அதிகம். கூடுதல் தகவல்களை **johnsonsbabycare.com / somuchmore** இணையத்தளத்தில் பாருங்கள்.

Johnson's ஒவ்வொரு கணத்திலும் இன்னும் அதிகம்

www.pabcbank.com
(011) 4 667 222

# சேமிப்புக் கணக்குகளுக்கு அதிகூடிய வட்டி

5.5%

(5.65% வ.தே.வீ.)

CHAMPION
SAVER

சேமிப்புக் கணக்கு

- சேமிப்புகளுக்கு 5.5% (5.65% வ.தே.வீ.) வட்டி
- வட்டியைப் பெற்றுக்கொள்வதுடன் பணத்தேவை ஏற்படும் ஒவ்வொரு தடவையும் சேமிப்பிலிருந்து மீளப்பெறும் வசதி
- VISA குறி உள்ள எந்தவொரு ATM நிலையத்திலும் உங்கள் பணத்தை மீளப்பெறும் வசதி

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

(011) 4 667 222

பான் ஏஷியா வங்கி

ரமழான் காலத்தில் Dialog IDD உடன் இணைந்து

ரூ.198/-க்கு

மணித்தியால கணக்கில் கதைத்து மகிழுங்கள்

மணித்தியாலத்திற்கு அண்மித்த அழைப்பு நேரம்

| மலேசியா | சைப்ரஸ் | இந்தியா | பஹ்ரேன் |
|---|---|---|---|
| 53 நிமிடங்கள் | 53 நிமிடங்கள் | 64 நிமிடங்கள் | 45 நிமிடங்கள் |

அரை மணித்தியாலத்திற்கு அண்மித்த அழைப்பு நேரம்

| ஜோர்தான் | பாகிஸ்தான் | குவைத் | சவுதி அரேபியா |
|---|---|---|---|
| 24 நிமிடங்கள் | 26 நிமிடங்கள் | 24 நிமிடங்கள் | 21 நிமிடங்கள் |

மேலே குறிப்பிடப்பட்ட அழைப்பு நேரங்கள் நிலையான தொலைபேசி இணைப்புகளின் Per minute பக்கேஜ்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்

IDD ரீசார்ஜ் கார்ட் மற்றும் ரீலோட் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்

| ரூ.798/-ற்கு | ரூ.598/-ற்கு | ரூ.198/-ற்கு | ரூ.98/-ற்கு |
|---|---|---|---|
| ரூ.1900/- IDD | ரூ.1200/- IDD | ரூ.500/- IDD | ரூ.175/- IDD |

மிகக் குறைந்த கட்டணத்துடன் அதி கூடிய போனஸ்

இலங்கையின் பிரபலமான தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
2015

an axiata company

எதிர்காலம் இன்றே. Dialog

# ஹரிஸ்சந்திர வழங்கும் சிவப்பரிசி மற்றும் வெள்ளையரிசி இடியப்பம்

ஹரிஸ்சந்திர என்ற நாமம் மிகச் சிறப்பானதாகவும் முழுமையான உணவுடன் ஒத்ததாகவும் இருப்பதன் காரணமாக, சந்தையில் இது மறுக்கப்பட முடியாத வகையில் முன்னணி வகிக்கின்றது. பல விடயங்கள் மாறி விட்டன. ஆனால், நாம் மாறவில்லை. மிகச்சிறந்த பொருட்கள் சேர்த்து அன்புடனும் கரிசனையுடனும் பார்த்துப் பார்த்து பழைய பாரம்பரிய முறையில் இந்த இடியப்ப கலவை தயாரிக்கப்பட்டுள்ளது. ஹரிஸ்சந்திரவிடமிருந்து பெற்றுக் கொண்டதனால், அது இயற்கையும் ஊட்டச்சத்தும் மிக்க உணவு என்பதனை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.




ஹரிஸ்சந்திர, தரத்திற்கு நம்பகமான நாமம்

மேலதிக விபரங்களுக்கு,
இணையத்தளம்: www.harischandramills.com அல்லது
www.facebook.com/harischandramills
தொ.பேசி. 011 2 685 734 / 041 2 224 701
ஈ-மெயில்: info@harischandramills.com

விலை - ரூ 100/- இலிருந்து

இப்பத்திரிகை கொழும்பு - 6. வெள்ளவத்தை. பெரகும்பா பிளேஸ். 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால். 2015 ஜூலை 08ஆம் திகதி வெளியிடப்பட்டது.